Registered as a News Paper in Sri lanka


விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 04 புதன்கிழமை (19.12.2012) பக்கங்கள் 20 ஓசை – 080

விஷானி நகை மாளிகை
மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு


இல. 187, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)













## ராதிகா சிற்சபைஈசனுக்கு பரதநாட்டிய நட்சத்திர விருது



கனடாவின் தமிழ் பேசும் நாடாளு மன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசனுக்கு அண்மையில் கனடாவின் ஸ்காபுறோ நகரில் இடம்பெற்ற விருது விழா ஒன்றில் பரதநாட்டிய நட்சத்திர விருது வழங்கப்பட்டது. கனடாவில் கடந்த சில வருடங்களாக இயங்கிவரும் தமிழ் பண்பாட்டு மேம்பாட்டு பேரவை என்னும் அமைப்பு அண்மையில் சிறப்பு விருதுகள் வழங்கும் வைபவத்தை நடத்தியது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஷிராந்தி ராஜபக்ஷ கண்தானம் செய்யத் தயார்


தேசிய கண்தான தினத்தை முன்னிட்டு, கொழும்பு ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாளிகையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியாரும் முதல் பெண மணியுமான ஷிராந்தி ராஜபக்ஷ தனது கண்களைத் தானம் செய்யும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். இதுவரை கண்தானம் செய்தவர்களில் ஒரு மில்லியனாவது நபர் ஷிராந்தி ராஜபக்ஷ ஆவார்.



(19) ஆம் பக்கம் பார்க்க

# வடக்கின் அபிவிருத்திக்கு அவுஸ்ரேலியா நிதியுதவி

## யுத்தப் பாதிப்பைத் துடைக்க முயற்சி



யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கில் மீள்குடியமர்வைத் துரிதமாகவும், கண்ணிவெடிகளை அகற்றவும் அப்பகுதியில் நிலையான அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வதற்கும் அவுஸ்ரேலிய அரசு நிதி உதவிகளை வழங்க முன்வந்துள்ளது. கொழும்புக்கு விஜயம் செய்திருந்த அவுஸ்ரேலிய வெளியுறவு அமைச்சருக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜ பக்ஷவுக்கும் இடையில் இடம்பெற்ற உயர்மட்ட பேச்சுக்களின் போதே மேற்படி உதவித்திட்டத்துக்கு நிதி உதவி வழங்குவதாக அவுஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் உறுதி மொழி வழங்கினார்.

அத்துடன் இலங்கையின் பொருளாதாரத்தை நிலையான வளர்ச்சியாகக் கொண்டு செல்வதற்கு முழுமையான ஆதரவை பெற்றுக் கொடுப்பதற்கு அவுஸ்ரேலிய அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப்கார் தெரிவித்தார். மேலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் செயற்பாடு தற்போது வெற்றிகரமாக முடிவடைந்துள்ளதாகவும் அந்தச் செயற்பாடுகள் தற்போது 95 வீதம் முடிவடைந்துள்ளதாகவும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பிந்திய அரசியல் நிலைவரம் இராஜதந்திரிகளுக்கு விளக்கம்

இலங்கையின் தற்போதைய அரசியல் மற்றும் சமூக, பொருளாதார நிலைவரம் குறித்து கொழுமபில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது.

அரசியல் மற்றும் பொருளாதாரம் தொடர்பில் தற்போது நிலவும் பரந்துபட்ட பிரச்சினைகள் குறித்து கொழும்பிலுள்ள இராஜதந்திரிகளுக்கு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் விளக்கமளித்தார் என்று வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்போது, பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேராவும் அமைச்சின் செயலாளர் திலக அமுனுகமவும் கலந்துகொண்டிருந்ததாக அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## துணை மருத்துவ சேவைகள் யாழில் நேற்று ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் பணிபுரியும் இணை மருத்துவ சேவையாளர்கள் நேற்று சுகயீன விடுப்புப் போராட்டத்தை முன்னெடுத்ததன் காரணமாக வைத்தியசாலையின் இணை மருத்துவ சேவைகள் நேற்றுப் பாதிக்கப்பட்டிருந்தது.

நாடு பூராகவும் உள்ள அரச வைத்தியசாலைகளில் பணிபுரியும் இணை மருத்துவர்கள் மேற்கொள்ளும் இத்தகைய போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தே அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன் காரணமாக வைத்திய

(19) ஆம் பக்கம் பார்க்க

## டீசல் விலை உயர்ந்தால் பயணிகள் சேவை ஸ்தம்பிக்கும்

### தனியார் பேருந்து சங்கம் அறிவிப்பு

எந்தவொரு காரணத்திலாவது டீசலின் விலை அதிகரிக்கப்படுமாயின் உத்தேச பேருந்து கட்டண மீளாய்வை ஏற்றுக்கொள்ளாது சேவையிலிருந்து விலகப் போவதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு

(19) ஆம் பக்கம் பார்க்க

## இந்திய இராணுவத் தளபதி இன்று கொழும்பு வருகிறார்

### முன்னாள் புலிகளுடனும் சந்திப்பு

(கொழும்பு)

இந்திய இராணுவத் தளபதி தலைமையிலான உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் குழுவினர் இன்று கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளனர். இக் குழுவினர் வவுனியாவுக்குச் சென்று புனர்வாழ்வு பெற்றுவரும் முன்னாள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களையும் சந்திப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது.



(19) ஆம் பக்கம் பார்க்க

# நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்க பல்வேறு திட்டச் செயற்பாடுகள்



(யாழ்ப்பாணம்)

நன்னீர் மீன் பிடியை ஊக்குவிக்கப் பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருப்பதாக கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனரத்தின யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

இதற்கென 1.6 மில்லியன் ரூபாய்கள் செலவு செய்யப்பட்டிருப்பதுடன் 600 மீன்பிடித் தோணிகளும் 666 மீன்பிடி வலைகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும், இதற்காக 7 மில்லியன் மீன் குஞ்சுகள் நீர் நிலைகளில் விடப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். குருநகர் பகுதியில் வடக்கு, கிழக்கு ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை (தனியார்)யைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், தொழில் நீரியல் வள அமைச்சர் இறால் வளர்ப்புக்கென 1.5 மில்லியன் ரூபாய்கள் செலவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் மன்னார்ப் பகுதயில் சங்கு வளர்ப்புத்திட்டமொன்றும் செயற்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## பொதுச்சந்தை கட்டடப் பணி பூர்த்தி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபையினால் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வந்த பொதுச்சந்தை கட்டடப் பணிகள் பூர்த்தியடைந்த நிலை யில் கட்டடத்துக்கான உட்பூச்சு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இப்பொதுச்சந்தை எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

## மீள்குடியேற்ற மக்களுக்கு 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுரைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமங்களில் யுத்தத்தினால் இடம் பெயர்ந்து மக்கள் மீள்குடியமர்ந்துள்ள நிலையில் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தால் வழங்கப்படும் மீள்குடியேற்றப்பணமான 20 ஆயிரம் ரூபாவைப் பெறாத மக்களுக்கான கொடுப்பனவு நாளை வழங்கப்படவுள்ளது.

இப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள அளம்பில் வடக்கு, அளம்பில் தெற்கு, செம்மலை, செம்மலை கிழக்கு, கொக்கிளாய் கிழக்கு, மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் வடக்கு, தெற்கு, மத்தி, தண்ணிமுறிப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களில் இக்கொடுப்பனவைப் பெறாத மக்கள் அன்றையதினம் காலை 9.30 மணி முதல் 4.30 மணி வரை செம்மலை கிராம சேவையாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

மக்கள் வருகை தரும்போது குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் வருகை தருமாறு அறவிக்கப்பட்டுள்ளது. (04)

## திருவெம்பாவை உற்சவவிழா

(காரைநகர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் சிவன் கோயிலில் திருவெம்பாவை உற்சவ விழா இன்று முதல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விசேட அபிஷேக ஆராதனைகள், பூசைகள் என்பன சிறப்பாக இடம்பெறவுள்ளன.

இவ்வுற்சவ காலத்தில் தினமும் காலை, மாலை மாணிக்க வாசகர் நடராஜப் பெருமான் சந்நிதானத்துக்கு எழுந்தருளி திருவெம்பாவை ஓதுதல் நடைபெறும்.

இதில் முதல் எட்டுத் தினங்களாகிய இன்று முதல் 26 ஆம் திகதி வரை காலை 7.00 மணிக்கு அபிஷேகமும், 9.00 மணிக்கு காலைப் பூசை, 10.00 மணிக்கு திரும்வெம்பாவை ஓதுதல் என்பன இடம்பெறும்.

இதில் 27 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவில் சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீநடராஜப் பெருமான் பிள்ளையார், வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணியர், ஐயனார், மணி வாசகர் ஆகிய பரிவார மூர்த்திகள் 5 இரதோற்சவங்களில் எழுந்தருளி பஞ்சரத பவனி இடம்பெறும். இதில் அன்றைய தினம் பின் இரவு சூரிய உதயத்தில் அருந்திரா தரிசனம் இடம் பெறவுள்ளது.

28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவம் இடம் பெறவுள்ளதுடன், அடியார்களின் நேர்த்திக் கடன்களும் இடம்பெறவுள்ளது.

இத்திருவிழாக் காலத்தில் ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களின் நலன்கருதி அரச, தனியார் பேருந்து சேவைகள் இடம் பெறவுள்ளதுடன், ஆலய வீதியில் அமைந்துள்ள மாணிக்க வாசகர் மடாலயம், ஈழத்துச் சிதம்பர அறக்கொடை மடலாயத்திலும் அன்னதானம் இடம் பெறவுள்ளது. (50)

## பாலியல் துஷ்பிரயோகம் சூத்திரதாரிக்கு வழக்கு

(மணற்காடு)

மணற்காடு, குடத்தனைப் பகுதியில் பதின்நான்கு வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கிய குடும்பஸ்தரை இன்று யாழ்.சிறுவர் நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்படுத்தவுள்ளனர்

குடத்தனைப் பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் குறித்த சிறுமியைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கி வந்துள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்திருப்பதாக அறிய முடிகின்றது.

இது தொடர்பாக தற்போது சிறுமி பெற்றோரிடம் தெரியப்படுத்தியதையடுத்து சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### வர்ண இரவு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் 2012 ஆம் ஆண்டுக்கான வர்ண இரவு நிகழ்வு நாளை கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

### முதியோர் சங்கங்களின் வருடாந்தக் கூட்டம்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிலுள்ள முதியோர் சங்கங்களின் இம்மாதத்திற்குரிய கூட்டம் நாளை காலை 9.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

அனைத்து முதியோர் சங்க அங்கத்தவர்களையும் தவறாது சமூகம் தருமாறு சமூகசேவை உத்தியோகத்தர் ந.புரட்சிதாசன் அறிவித்துள்ளார். (104)

### மக்களின் பார்வைக்கு

(புத்தூர்)

பிரதேச சபையின் கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக வலிகாமம் கிழக்கு புத்தூர் பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான பாதீடு பொது மக்களின் பார்வைக்காக தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் கடந்த 14 ஆம் திகதியில் இருந்து எதிர்வரும் 21 ஆம் திகதி வரை வைக்கப்பட்டுள்ளது என பிரதேசசபையின் தவிசாளர் அன்னலிங்கம் உதயகுமார் அறிவித்துள்ளார்.

### ஒளி விழாக்கள்

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஒளிவிழா இன்று காலை 9.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் க.முரளிதரன் தலைமையில் நடைபெறும். (104)

◈ ◈ ◈ ◈

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஒளிவிழா இன்று காலை 9.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் க.முரளிதரன் தலைமையில் நடைபெறும். (104)

### திருவாசக விழா

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையினால் வருடா வருடம் நடைபெற்று வரும் திருவாசக விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செல்வச் சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆலயத்திலிருந்து நால்வர் திருவுருவப்படமும், திருவாசக ஏடுகளும் திருவாசக பராயணத்துடன் ஆச்சிரம வளாகத்திற்கு எடுத்து வரப்படவுள்ளது.

இதில் சிறப்பு நிகழ்வாக காரைநகர் கிழவன்காடு கலா மன்ற மாணவர்களின் கலை நிகழ்வுகளும், முருக அடியார்களின் முருக நாம பஜனை என்பனவும் திருவாசகப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் இடம்பெறவுள்ளன. (04)

## குறைவடைந்து வரும் டெங்கு நோயாளர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகி வருபவர்களது எண்ணிக்கை கடந்த சில நாட்களாகக் குறைந்திருப்பதாக வைத்தியசாலையின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் இவ்வாறு நோய்த் தொற்றுக்கு இலக்காகிய ஒருவரும், நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மற்றும் வேலணையில் இருந்து ஒருவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை சண்டிலிப்பாயில் இருந்து இருவரும் அனுமதிக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இவர்களுடன் இந்த மாதத்தில் யாழ்.மாவட்டத்தில் இதுவரை 76 பேரும், இந்த வருடத்தில் இதுவரை 620 பேரும் டெங்கு நோயின் தாக்கத்துக்கு இலக்காகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் ஏனைய வைத்திய நிலையங்களில் சிகிச்சை பெற்று வந்ததாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.


**ஊர்காவற்றுறை பிரதேசசபை**

**வரவு-செலவுத்திட்டம் - 2013**

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் கட்டளைகள் சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பொது மக்தள் வரவு செலவுத்திட்டத்தை 19.12.2012 ஆம் திகதியில் இருந்து 25.12.2012 ஆம் திகதி வரை சபையின் தலைமை அலுவலகம் மற்றும் ஊர்காவற்றுறை, நாராந்தனை, அனலைதீவு, எழுவைதீவு உப அலுவலகங்களிலும், பொது நூலகங்களிலும் பார்வையிடலம் என்பதை அறியத் தருகின்றேன்.

ஊர்காவற்றுறை பிரதேசசபை.<br>ஊர்காவற்றுறை

ம.ஜெயகாந்தன்,<br>தவிசாளர்,<br>ஊர்காவற்றுறை பிரதேசசபை.

(C/1771)


## நொதேர்ன் பவர் கம்பனிக்கு விருது


(திருநெல்வேலி)

எம்.ரீ.டீ.வாக்கேர்ஸ் (Walkers) துணை நிறுவனமான யாழ்ப்பாணம் நொதேர்ன் பவர் கம்பனிக்கு ஜீ.சீ.ஈ.ஏ (Global Commersec Excelence Awards) 2012 விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதினை நொதேர்ன் பவர் கம்பனியைச் சேர்ந்த ஹரி மகாதேவன் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும், சிறப்பு விருந்தினர்களாக மின்சக்தி அமைச்சின் செயலாளர் மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நாட்டின் இக்கட்டான சூழலில் யாழ்ப்பாண மக்களுக்கு ஆற்றிய சேவைக்காக நொதேர்ன் பவர் கம்பனிக்கு ஜீ.சீ.ஈ.ஏ 2012 எண்ணும் இவ் விருது கிடைக்கப் பெற்றுள்ளது.

பயங்கரவாதிகளினால் மூன்று தசாப்தங்களாக நாடு எதிர்நோக்கிய குழப்பமான சூழ்நிலையின் போது நாட்டின் பொருளாதாரத்துக்கும், பொருளாதார நடவடிக்கைகளுக்கும் பங்காற்றிய இலங்கையின் அந்நிய நாட்டுப் பங்காளிகளுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக நாட்டில் பல இடர்களையும், சவால்களையும் எதிர்நோக்கியதோடு, நாட்டு மக்களுக்கு ஆற்றிய சேவைக்காகவும் பாராட்டுத் தெரிவிக்கப் பட்டுள்ளது.



ஷிப்பேர்ஸ் அக்கடமி (Shippers Academy)தனது கூட்டு நிறுவனங்களுடனும், இலங்கை துறைமுக அதிகாரசபை, முதலீட்டுச் சபை, ஏயார்போர்ட் ஏவியேஷன் (Air port Aviation) மற்றும் மத்திய வங்கி ஆகிய நிறுவனங்கள் இணைந்து இது சம்பந்தமான முதலீட்டாளர்களையும், வியாபாரங்களையும் இனம் கண்டு அவர்களை ஜீ.சீ.ஈ.ஏ 2012 என்ற விருதை வழங்கிக் கௌரவித்துள்ளன. (137)

# சிறுவர் உரிமை மீறல்களை நீதிமன்றத்தில் தெரிவிக்க முடியும்

## - பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி -

(வடமராட்சி)

சிறுவர்கள் தாம் சுதந்திரமாக வாழ்வதற்கு கூட உரிமைகள் மீறப்படும் பட்சத்தில் எவ்வித தயக்கமும் இன்றி நீதிமன்றில் நேரடியாக வந்து முறையிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி நந்தசேகரம் தெரிவித்துள்ளார்.

தும்பளை அஞ்சலியகத்தில் சிறுவர் தின நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில், அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

18 வயதை எட்டும் வரையான சிறுவர்களுக்கு அம்மா, அப்பா மட்டும் பாதுகாவலர் அல்லர். அதற்கு மேலாக உங்கள் மாவட்டத்தில் இருக்கும் [illegible]வான் நீதிமன்ற நீதிபதி[illegible]ளும் பாதுகாவலர்களாக விளங்குகின்றனர்.

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பில் சகலரும் அறிந்து செயற்பட வேண்டும். அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவ்வாறில்லாமல் உரிமைகள் மீறப்படும் சமயத்தில் அவர்கள் தாமாக முன்வந்து நீதிமன்றில் தெரிவித்து தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கான சூழ்நிலை, சந்தர்ப்பம் இருக்கிறது.

நீதவான் நீதிமன்றம் குற்றம் செய்தவர்களுக்கு மட்டுமல்ல சிறுவர்களுக்காக மட்டும் நீதிமன்றம் இரண்டு இலங்கையில் உள்ளது. ஒன்று கொழும்பிலும், மற்றையது யாழ்ப்பாணத்திலும் தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ளது. அங்கு நேரடியாகச் சென்றும் சிறுவர் உரிமை மீறல்களை தெரிவித்துக் கொள்ள முடியும். சிறுவர்களாகிய உங்களது வாழ்வில் பங்காளிகளாக கலந்து கொண்டிருக்கின்ற பாதுகாவலர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர்களின் அறிவுரைகளை செவிசாய்த்து அதன்படி நடந்து கொள்ள வேண்டும்.

மேலும் சிறுவர்கள் மீது திணிக்கப்படுகின்ற துஷ்பிரயோகங்களில் இருந்து அவர்களைப் பாதுகாக்க ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட வேண்டும். அப்போது தான்



இன்றைய சிறுவர்கள் நாளைய எதிர்காலத்தில் நல்ல பிரஜையாக உருவாக்க முடியும் என அவர் தெரிவித்தார். (116)

## சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2012

உறுப்புரை - 17

1. தனியாகவும், வேறொருவருடன் கூட்டாகவும் ஆதனத்தைச் சொந்தமாக வைத்திருப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு..

2. எவரினதும் ஆதனம் ஒருதலைப்பட்ட மனப்போக்கான வகையில் பறிக்கப்படுதல் ஆகாது.

# பரிசளிப்பு விழா

(வடமராட்சி)

புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்ற பொன்விழாவின் முன்பள்ளி மாணவர்களின் கலை விழாவும் பரிசளிப்பு விழாவும் மன்ற அரங்கில் மன்ற உபதலைவர் டாக்டர் எஸ்.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

செல்வி மாதுரி மதியழகனின் இறைகீதத்துடன் ஆரம்பமான இவ்விழாவிலே மன்ற முகாமைத்துவ ஆலோசகர் கே.இராஜரட்ணம் ஆசியுரை வழங்கினார்.

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் என்.பகீரதன் பிரதம விருந்தினராகவும், ஈ.சொப்ற் கணனி பயிற்சி நிறுவன நெல்லியடி இணைப்பாளர் எஸ்.கலீபன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

கணனிப்பயிற்சி நெறிகளைப் பயின்ற சிறுவர்களுக்கான தராதரப்பத்திரங்களும் வழங்கப்பட்டன. (01)

# 7 ஆவது ஆண்டு பொதுக்கூட்டம்

காரைநகர் மத்தி மேம்பாட்டுக் கழகத்தின் ஏழாவது ஆண்டு பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை கழக அலுவலகத்தில் பி.ப 2.00 மணியளவில் கழகத்தலைவர் ந.கிருஷ்ணபவன் தலைமையில் இடம்பெறும்.

முதன்மை விருந்தினராக தீவகவலய இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் வீ.இராதாகிருஷ்ணன் கலந்து கௌள்ளவுள்ளார். இதில் தரம் 5 புலமைப்பரிசில் தேர்வில் சித்திபெற்ற கழகத் தொழிற் பரப்புக்குரிய 6 மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (50)

# அம்மன் ஆலயங்களில் மழையை வேண்டி வழிபாடு

(அரியாலை)


குடா நாட்டு வயல்களில் பயிர் வளர்ச்சிக்காலத்தில் வயலில் நீர் நிறைந்து நிற்கவேண்டிய காலத்தில் பல இடங்களில் வயல்கள் வரண்டு போயுள்ளதால் மழை வேண்டி அம்மன் கோவில்களில் கடந்த வெள்ளிக்கிழமை அபிஷேக ஆராதனைகளும், பூசை வழிபாடுகளும் பரவலாக இடம் பெற்றுள்ளன.

அரியாலை, தீவுப்பகுதி, மற்றும் தென்மராட்சி பகுதிகளில் அந்தந்தப்பகுதி மக்கள் அம்மன் ஆலயங்களில் பொங்கல் அபிஷேகங்களை நடத்தி வழிபட்டனர்.

புளியங்கூடல் முத்துமாரி அம்மன் கோவிலில் இந்து மக்கள் ஒன்றுகூடி ஆயிரம் இளநீர் வெட்டி குளிர்த்தி வழிபாடு செய்ததுடன், பொங்கல் அபிஷேக விழாவையும் செய்து மழை வேண்டி வழிபாடாற்றினர்.

இதேபோல குடா நாட்டு அம்மன் கோவில்களிலும் ஏனைய இந்துக் கோவில்களிலும் விசேட பூசை வழிபாடுகள் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (23)

# ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் தீந்தமிழ்ப் பனுவல் திருவெம்பாவை



## திருவெம்பாவை விரதம் இன்று ஆரம்பம்

ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்சோதியாக விளங்குகின்ற சிவபெருமானைப் புகழ்ந்து பாடும் திருவெம்பாவை இன்று ஆரம்பமாகிறது.

மாணிக்க வாசக சுவாமிகளால் திருவாய் மலர்ந்தருப் பெற்ற இந்தத் திருவெம்பாவை ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் தீந்தமிழ்ப் பனுவலாகும். திருவாசகத்தின் ஓர் இனிய பகுதியே திருவெம்பாவை ஆகும்.

மார்கழிப் பூரட்டாதி தொடக்கம் திருவாதிரை வரையுமுள்ள பத்து நாட்களுக்குத் திருவெம்பாவைப் பூஜையும், பாராயணமும் நடைபெறுகின்றது. இந்தத் திருவெம்பாவைப் பூஜை அதிகமாக எல்லா ஆலயங்களிலும் இடம்பெறுவதுண்டு. கிருஷ்ணர் கோயிலில் மட்டும் திருப்பாவை பூஜையும், பாராயணமும் நடைபெறும்.


பாவை நோன்பு என அழைக்கப்பெறும் இத்திருவெம்பாவை எல்லாம் வல்ல சிவபெருமானுக்குரிய விரதமாகும். இவ்வுலகில் நிகழும் ஒரு வருட காலம் தேவர்களுக்கு ஒரு நாள் தை முதல் ஆனி வரை உத்தராயணம் எனவும், ஆடி முதல் மார்கழி வரை தட்சணாயனம் எனவும் கொள்ளப்படும். தேவர்களுக்கு இந்த மார்கழி விடியற்காலமாகும்.


இந்த மார்கழி கன்னிப் பெண்கள் அதிகாலையில் எழுந்து நீராடி இறை வழிபாடியற்றித் தமக்கு நல்ல கணவர் வந்து வாய்க்க வேண்டும் என்று நோன்பிருந்து வேண்டிக் கொள்வார். மாணிக்கவாசகர் திருவண்ணாமலையில் தங்கிய போது இதனைக் கண்ணுற்றார். அப்போது பாடப்பெற்றதுதான் இந்தத் திருவெம்பாவை. முற்று முழுதாகக் கன்னியர் பாடுவதாகவே அமைந்துள்ளது.

'திருவாசகத்துக்கு உருகாதவர் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது முதுமொழி. ஆகவே உள்ளத்தை நெக்குருகி சிவனை நினைக்கச் செய்கின்ற இத்திருவெம்பாவையை நாம் எல்லோரும் உய்த்துணர்ந்து ஓதுதல் வேண்டும். மேலும் இம்மார்கழியில் தான் விஷ்ணு ஆலயங்களில் ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவையும் பாடப்படுகிறது. மாதங்களில் சிறந்தது மார்கழியே. அதனால் தான் அதிகாலையில் இறைவழிபாடு செய்தால் பிறவிப் பிணி அகன்று பேரின்ப முத்திநிலை கிடைக்கும் என்று நம்முன்னோரால் கருதப்பட்டது.

'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்று சிவபெருமானாலே பணிக்கப்பெற்ற பெருமையுடைய இத்திருவெம்பாவை மிகவும் புனிதமும் மகிமையும் நிறைந்த திருப்பாடல்களாகும். அத்துடன் மார்கழி நீராடுதல் பற்றியும் திருவாதிரையின் சிறப்புப் பற்றியும் வெளிக்கொணர்ந்து நிற்கும் இந்தத் திருவெம்பாவையை சைவ மக்கள் ஒவ்வொருவரும் உய்த்துணர்ந்து ஓதி புண்ணியப் பேற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

- சிவநெறிக் கலாநிதி -
இராசையா ஸ்ரீதரன்





விளைவேலி மருதடி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற கஜமுகசூரன் போர் விழாவில் விநாயகப் பெருமான் சூரனைச் சங்காரம் செய்ய புறப்படுவதையும், கஜமுக சூரன் வலம் வருவதையும், ஆலய முன்றலில் சூரசம்ஹாரம் இடம்பெறுவதையும் காணலாம்.

(படங்கள்: ஆர்.இராஜகுமார்)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## புவியை நாமேதான் அழிக்கிறோம்!

எந்தக் கலண்டர்களின் படியும் சோதிடங்களின் படியும் உலகம் அழிந்துவிடுவதில்லை என்பதைச் சொல்லி விஞ்ஞானிகள் பலமுறை நிரூபித்திருக்கிறார்கள். இம்முறையும் உலகம் அழிந்துவிடப் போவதில்லை என்று அவர்கள் விளக்கியிருப்பதன் உண்மையை 22 ஆம் திகதி எல்லோரும் அறிந்துவிடுவார்கள்.

முழுமுற்றான உலக அழிவு என்பது நமது சூரியனுள்ளே நடைபெற்றுக்கொண்டிருக்கும் மாற்றங்களினால் வரக்கூடியதுதான் என்கிறார்கள் விஞ்ஞானிகள். நம்மால் தவிர்க்க இயலாத ஒரே அபாயம், சூரியன் தனது எரிபொருள் அனைத்தையும் இழந்து தீர்ந்துபோவதுதான். ஆய்வுகளின்படி, சூரியன் 5000 மில்லியன் ஆண்டுகளுக்கு சுடர்ந்து ஒளிவிட்டுக் கொண்டு தான் இருக்கும் என்பது தெளிவாகியுள்ளது. அதனால் தற்போதைக்கு நமது உலகமோ கோள் குடும்பமோ எந்த வகையான அழிவு நிலையையும் சந்திக்கும் வாய்ப்பே இல்லை.

விநோதம் என்னவென்றால், இத்தகைய இயற்கை அழிவுகளைத் தடுப்பதற்கும், அது இயலாமல் போகும்போது வேறு கிரகங்களுக்குக் குடிபெயர்ந்து கொள்ளவும் கூட மனிதனின் விஞ்ஞான ஆற்றல் வகைசெய்துவிடும். ஆனால் மனிதன் தனக்குத் தானே உண்டாக்கிக் கொள்ளும் அழிவுகளிலிருந்துதான் அவனைப் பாதுகாப்பது சிரமம் என்று தெரிகிறது.

குறிப்பாக உலக வெப்பமயமாதலைக் குறைக்க நாடுகளிடையே இன்னும் ஒற்றுமை காண முடியாமல் இருக்கிறது. அது போல மனிதர்களையும் பூமியையும் ஒரு நொடியில் அழித்து விட வல்ல அணுகுண்டுகளையும் ஏவுகணைகளையும் குறைப்பதற்கும் நம்மிடையே உடன்பாடுகள் கண்டுகொள்ள இயலவில்லை.

உலக வெப்பமயமாதல் மனித இனத்தின் இறுதிக் காலத்தை நிர்ணயிக்கக் கூடும் என ஒரு கருத்து நிலவுகிறது. உலக வெப்பத்தை அதிகரித்து, பனிப்பாறைகளை உருக வைத்து, அனைத்து உயிரினங்களையும் அழிவின் விளிம்புக்கு கொண்டு வந்துவிட்டார்கள் மனிதர்கள். ஏராளமான தொழிற்சாலைகள் அதன் புகை மற்றும் இரசாயனக் கழிவுகள், வாகனங்களின் புகை, தேவைக்கு அதிகமான மின்சாரம் இவையெல்லாம் சேர்ந்து பூமியின் வெப்பத்தை அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

எவ்வளவு அதிகரிப்பு தெரியுமா? ஒவ்வொரு நாளும் இரண்டு அணுகுண்டு வெடிப்புக்கு சமமான புகை பூமியில் இருந்து வெளியேறுகிறது. இதனால், பூமியில் இருந்து 8 கிலோமீற்றர் வரை உள்ள வாயு மண்டல பகுதிகளில் கடந்த 100 ஆண்டுகளில் 0.5 பாகை செல்சியஸ் வெப்பம் உயர்ந்துள்ளது. இந்த வெப்ப அதிகரிப்பால், 13 ஆயிரம் சதுர கிலோமீற்றருக்கு துருவ பனிப்பாறைகள் உருகியுள்ளன. இதன் விளைவாகவே பல இடங்கள் மனிதன் வாழவே முடியாத இடங்களாக மாறி வருகின்றன. நியூகினியாவில் பல தீவுகள் கடலுக்கடியில் போய்விட்டன.

சூரியனால்தான் பூமி அழியும் என்பது அறிவியல் விதி. ஆனால் வாழுமிடத்தை வெப்பமயமாக்கி, மனிதன்தான் உலகின் இறுதிக்காலத்தை நோக்கி வேகவேகமாக போய்க்கொண்டு இருக்கிறான்.

கிரீன்லாந்தில் உள்ள உலகின் மிகப்பெரிய பனி அடுக்குகளும், துருவப்பாறைகளும் உருகினால், ஒட்டுமொத்த மனித இனமும் மூழ்கி அழிய வேண்டியதுதான். இந்த பனி அடுக்குகள் பல ஆண்டுகளுக்கு முன்பே உருகத் தொடங்கிவிட்டன.

புவி வெப்பமடைதலை முழுவதுமாய் குறைக்க முடியாவிட்டாலும் மனிதர்களாகிய நாம் முயன்றால் அதன் வேகத்தையும் அளவையும் கட்டுப்படுத்தலாம். எங்கள் நவீன வாழ்வுப் பயன்பாடுகளை கட்டுப்படுத்திக்கொண்டு புவியை எழில்கொஞ்சும் வாழிடமாக நீடித்து வைத்திருக்க இந்த பூமியின் மனிதர்கள் ஒன்றிணைய வேண்டும். - ஆசிரியர்

# பணத்தாள்களுக்கு சுருளுங்காலம் தற்போது உருப்பெற்று வருகிறது

## ஜனாதிபதி

(கொழும்பு)

வரலாற்று ஏடுகளை புறந்தள்ளி பணத் தாள்களுக்கு சுருளும் காலம் தற்போது உருப்பெற்று வருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தேசிய சுவடிகள் திணைக்களத்தில் நேற்று புதிய கட்டடத் தொகுதியை திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தக் குழுவினர் நாட்டின் வரலாற்றை மீண்டும் புதிதாக எழுதி வருகின்றனர். டொலர் தாள்களைக் கொண்டு நாட்டின் வரலாற்றை திரிவுபடுத்த இடமளிக்கப்பட மாட்டாது. சில பிரதேசங்களில் புல்டோசர் கொண்டு நாட்டின் வரலாற்றை அழிப்பதற்கு சிலர் முயற்சித்து வருகின்றனர். இத்தகைய செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது.

எமது வரலாறு மற்றும் கடந்த காலத்தில் எமது நாட்டை ஆண்ட மன்னர்கள் குறித்து நாம் பெருமை கொள்ளக்கூடிய யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்றார்.

# பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்புப்பேரணி

(மன்னார்)

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிரான வன்முறைகளை ஒழிக்கும் முகமாக யூ.எஸ்.எயிட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஏற்பாடு செய்திருந்த விழிப்புணர்வு நிகழ்வொன்று நேற்று மன்னாரில் இடம் பெற்றது.

மாத்தறையில் இருந்து 30 இளைஞர், யுவதிகளும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தஇளைஞர் யுவதிகளும் இணைந்து மன்னார் பஸார் பகுதியில் குறித்த விழிப்புணர்வு நிகழ்வை நடத்தினர். இதில் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னி மாகாண பணிப்பாளர் என். எம்.முனவ்பர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி பி.பூலோகராஜா, மன்னார் நகர இளைஞர் சேவை அதிகாரி ஏ.டி.யூ. குரூஸ், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி தவேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து காலை 10 மணியளவில் மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு முன்பாக ஆரம்பித்த இளைஞர், யுவதிகள் கலந்து கொண்ட பேரணி, பிரதான வீதியூடாக சென்று மன்னார் அரச பேருந்து தரிப்பிடத்தை அடைந்து கூட்டம் இடம்பெற்றது.

# ஒரு லீற்றர் பெற்றோலை 117 ரூபாவிற்கு விற்க முடியும்

## சஜித் பிரேமதாச

(கொழும்பு)

ஒரு லீற்றர் பெற்றோலை 117 ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். கிரிகொல்லவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஒரு லீற்றர் பெற்றோலின் மூலம் அரசாங்கம் இதுவரையில் 32 ரூபா இலாபம் ஈட்டியது, தற்போது அந்தத் தொகை 42 ரூபாவாக உயர்வடைந்துள்ளது.

செல்வந்தர்களுக்கு சலுகைகளை வழங்கி வரும் இந்த அரசாங்கம், சாதாரண பொதுமக்கள் மீது வரிச்சுமையை திணிக்கிறது. மக்களின் பணத்தைக் கொண்டு லம்போகினி மோட்டார் பந்தயக் கார்களை இறக்குமதி செய்ய 200 மில்லியன் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பெற்றோல் விலை உயர்வினால் சாதாரண பொதுமக்களே அதிகளவில் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும். ஒரு லீற்றர் பெற்றோலை இறக்குமதி செய்வதற்காக அரசாங்கம் 92 ரூபாவினை மட்டுமே செலவிடுகின்றது. மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் இந்தக்கருத்தை வெளியிடுவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

# வெள்ளைவான் கலாசாரத்தை மீண்டும் உருவாக்கக்கூடாது

## திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

இந்த நாட்டுக்கு மீண்டும் வெள்ளை வான் கலாசாரத்தை கொண்டுவரக் கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். பிரதம நீதியரசர் மீதான குற்றப்பிரேரணை குறித்து குரல் கொடுத்துவரும் சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க மீது தாக்குதல் முயற்சி மேற்கொண்டதன் மூலம் அரசாங்கத்தின் கொலை நடவடிக்கைகள் வெளியாவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தாக்குதல் மூலம் சட்டத்தரணிகள் சங்கத்தை பயமுறுத்த அரசாங்கம் முயற்சிப்பதாக கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

நீதித்துறை சுயாதீனம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது இந்த நாட்டு மக்களின் எண்ணம் அந்த எண்ணத்தை அழிக்க அரசு முயற்சிக்கின்றது.

இதேவேளை, க.பொ.த (சா/த) பரீட்சை விஞ்ஞான வினாப்பத்திரம் முன்னதாகவே வெளியாகியுள்ளதென்று எழுப்பப்படும் குற்றச்சாட்டை பரீட்சைகள் திணைக்களமே ஏற்றுக் கொண்டுள்ளது. அது குறித்து விசாரணை நடத்துமாறு இரகசிய பொலிஸாருக்கு முறையிடப்பட்டுள்ளது.

வினாத்தாள் முன்னதாகவே வெளியாகும் முறை கடந்த இரண்டு மூன்று வருடங்களாக இடம்பெற்று வருகின்றது. அரசாங்கத்தால் இதனை தடுக்க முடியாது போயுள்ளமை கல்வித்துறையில் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை இல்லா தொழித்துள்ளது என்றார்.

# மலவாயிலிற்குள் தங்க பிஸ்கட் கட்டுநாயக்காவில் இந்தியர் கைது

தங்க பிஸ்கட்டுகளை மலவாயிலில் மறைத்துக் கொண்டு சென்ற இந்தியப் பிரஜையொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று அதிகாலை 1.00 மணியளவில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு மலவாயிலில் மிகவும் சூட்சுமமாக கொண்டு சென்ற தங்க பிஸ்கட்டுகளின் நிறை 408 கிராம் எனவும், இதனுடைய பெறுமதி 26 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாவெனவும் விமான நிலைய தகவல்கள் தெரிவித்துள்ளன.

31 வயதுடைய இந்திய பிரஜையொருவரே இவ்வாறு தங்க பிஸ்கட்டுகளை மலவாயிலிற்குள் வைத்துக்கொண்டு இலங்கையிலிருந்து சென்னைக்கு தப்பிச் செல்ல முற்பட்டுள்ளார்.

மேற்படி நபரைக் கைதுசெய்த விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# பூமி நிச்சயம் அழியப்போவதில்லை

**என்.ராமதுரை**

உலகம் அழியப் போகிறது. பூமியே அழியப் போகிறது என்பதாகப் பல ஊடகங்கள் மூலம் பரப்பப்படுகிற வதந்திகளை நம்பாதீர்கள். எல்லாமே கட்டுக்கதை.

பூமி அழியப் போகிறது என்று வதந்தி கிளப்புவோர் தங்களது கூற்றுக்கு ஆதர வாகக் கூறுகின்ற 'ஆதா ரங்களுக்கு' எந்த அறி வியல் அடிப்படையும் இல்லை.


உலகம் அழியப் போவதா- கப் பல ஆண்டுகளாக அவ்வப்போது கிளம்பி வந்துள்ள அனைத்து வதந்திகளும் பொய்யாகிப் போயின. இப்போதைய வதந்தியும் அப்படி பொய்யாகிப் போகிற வதந்தியே.

பூமி அழியப் போவதாக இன்ரநெற்றில் செய்தி வெளியானால் யாரும் அதை மூட நம்பிக்கை என புறக்கணிப்பதில்லை. ஏனெனில் இன்ரநெற்றில் வந்தால் அதற்கு தனி மரி யாதை. அது ஆங்கிலத்தில் இருப்பதால் தனி அந்தஸ்து. அமெரிக்காவிலிருந்து வருவதால் அது மதிக்கப்பட வேண்டிய ஒன்று என்று கருதுகிறார்கள்.

**இப்படியான பீதி பரவும் போது பல சமூக விரோத செயல்கள் தோன்றும். மன உறுதியற்றவர்கள் தற்கொலை எண்ணத்தைப் பெறுவர். சில நாட்கள் தானே உயிரோடு இருக்கப் போகிறோம், அதற்குள்ளாக எல்லாவற்றையும் அனுபவித்து விட வேண்டும் என முறைகேடான செயல்களுக்கு தூண்டப்படுவோர் இருப்பர். சமூகத்தில் சீர்குலைவை ஏற் படுத்தும் வகையில் பீதி கிளப்புவது என்பது கிரிமினல் குற்றமாகும்.**

உலகம் அழியப் போவ தாகக் கிளப்பி விடப்பட் டுள்ள செய்தி இப்படியாகத் தான் சீரியஸாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதை யாரும் ஒதுக்கித் தள்ளுவதில்லை. இந்த வதந்திகளுக்கு அறிவியல் சாயம் பூசப்பட்டுள்ளதும் ஒரு காரணமாகும்.

மாயன் கலண்டரில் பூமி அழியும் என்று சொல்லி யிருக்கிறதாம். உலகில் மாயன் கலண்டர் அல்ல. வெவ்வேறான பல கலண்டர்களும் இருந்து வந்துள்ளன. பாபிலோனி யர், எகிப்தியர், சீனர்கள், பண்டைக்கால இந்தியர்கள் என ஒவ்வொருவரும் தனித் தனி கலண்டர்களைப் பின்பற்றினர். 2012 ஆம் ஆண்டில் பூமி அழியப் போவதாக ஒருமுகமாக எல்லா கலண்டர்களிலும் கூறப்பட்டுள்ளதா? அப்படி ஒன்றுமில்லை.



தங்களைச் சுற்றி உள்ளவர்கள், அத்துடன் தங்களைப் பின்பற்றுபவர்கள் ஆகியோர் மீது தங்கள் பிடி இருக்க வேண்டும் என்பதற்காகக் கடந்த காலத்தில் காட்டுவாசிகளின் தலைவர்கள், பூசாரிகள், மத குருமார்கள், ராஜ குருக்கள் போன்றோர் சந்திர கிரகணம், சூரிய கிரகணம், வால் நட்சத்திரத்தின் தோற்றம் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டு மக்களைப் பயமுறுத்தி தங்களுக்கு அடிபணிந்து நடக்கும்படி செய்து வந்தனர்.. மக்களின் அறி யாமை இதற்கு வசதியாக இருந்தது.

ஐரோப்பாவில் 1860 ஆண்டில் பெரிய வால் நட்சத்திரம் தோன்றிய போது விஷயமறியாத மக்கள் உலகம் அழி யப் போகிறது என்று பீதியில் ஆழ்ந் தனர். பலர் தங்களது சொத்துக்களை மடங்களுக்கு எழுதி வைத்தனர்.

இப்போது அறிவியல் முன்னேற்றம் காரணமாக மக்களை எளிதில் ஏமாற்றி விட முடியாது. ஆகவே மக்களை நம்ப வைப்பதற்குப் புதிதாக ஏதாவது கண்டுபிடிக்க வேண்டும். மாயன் கலண்டர் பற்றிய 'கண்டுபிடிப்பு' அப்படிப்பட்டதே.

உலகம் எப்படி அழியப் போகிற தாம்? நிபிரு என்ற ஒரு கிரகம் பூமி மீது மோதப் போகிறதாம். நிபிரு என்ற கிரகமே கிடையாது. அது எங் கிருந்தோ வந்து மோதவும் வாய்ப்பு கிடையாது

பூமியை சந்திரன் சுற்றுகிறது. பூமியும் மற்றும் எட்டு கிரகங்களும் சூரியனை சுற்றுகின்றன. இது பல நூறு கோடி ஆண்டுகளாக இயற்கை நியதிகளின் படி நடைபெற்று வருவதாகும். சூரியன் இந்த கிரகங்களை இழுத்துக் கொண்டு நமது அண்டத்தின் (Galaxy) மையத்தைச் சுற்றி வருகிறது. இதுவும் பல கோடி ஆண்டுகளாக நிகழ்ந்து வருகிறது.

சூரிய மண்டலத்துக்குள்ளாகப் பறக்கும் பாறைகள் என்று சொல்லத்தக்கஅஸ்ட் ரோய்ட்கள் தங்களது பாதைகளில் சுற்றி வருகின்றன. பூமிக்கு அருகே வந்து செல்கின்ற அஸ்ட்ரோய்ட்கள் உண்டு. விஞ்ஞானிகள் இவற்றின் பட்டியலை ஏற்கெனவே தயாரித்து வைத்துள்ளனர். ஐந்து மீற்றர், பத்து மீற்றர் நீளம் கொண்ட பாறைகளின் சுற்றுப்பாதைகளும் அளந்து பதிவு செய்யப்பட்டுள்ளன.

உதாரணமாக டிசம்பர் 14 ஆம் திகதியன்று விஞ்ஞானிகள் எதிர் பார்த்தபடி ஐந்து மீற்றர் நீளமுள்ள பாறை ஒன்று பூமியைக் கடந்து சென்றது. விபரீதமாக எதுவும் நிகழ்ந்து விடவில்லை. இவை அனைத்தும் டெலஸ்கோப்கள், ராடர்கள், பூமியைச் சுற்றும் செயற்கைக்கோள்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.




எந்த பறக்கும் பாறை என் றைய தினம் பூமியைக் கடந்து செல்லும் என்பது பற்றிய விவரத்தை விஞ்ஞானிகள் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றனர். விஞ்ஞானி கள் இப்படியான விஷயங்களை மூடி மறைப்பது இல்லை.

ஒரு வால் நட்சத் திரம் சில லட்சம் கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் போதே அதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து விடுகிறார்கள். ஆகவே நிபிரு என்ற கிரகம் பூமியைத் தாக் கப் போகிறது என்றால் இத்தனை நேரத்துக்கு அது பூமியை நெருங்கியிருக்க வேண்டும். அப்படியானால் அது டெலஸ்கோப், ராடர், செயற்கைக் கோள் ஆகியவற்றில் தென்பட் டிருக்க வேண்டும். ஆனால் அப்படி எதுவும் இது வரை தட்டுப்பட வில்லை. ஐந்து மீற்றர் பறக்கும் பாறையே விஞ் ஞானிகளின் கருவி களில் சிக்கும் போது நிபிருகிரகம் இது வரை ஏன் தட்டுப்படவில்லை? நிபிரு கற்பனையான கிரகம் என்ப தால் தான் அது தட்டுப்படவில்லை. பூமிக்கு வேறு வகையில் ஆபத்து ஏற்படும் என்றும் விஷமிகள் கதை கட்டி விட்டுள்ளனர். சூரியனில்பயங் கர சீற்றம் ஏற்பட்டு சூரியனிலிருந்து நெருப்பு ஜுவாலைகள் பூமியைத் தாக்கி அழிக்கப் போவதாக பீதி கிளப்பிவிட்டுள்ளனர். இதுவும் அறி வியல் சாயம் பூசப்பட்ட கற்ப னையே.


சூரியனில் இப்போது அடிக்கடி சீற்றம் ஏற்படுகிறது என்பது உண் மையே. பதினோரு ஆண்டுகளுக்கு ஒரு முறை சூரியனில் கரும்புள்ளி கள் (Sunspots) அதிகபட்சமாக இருக்கும். இப்போது அப்படியான நிலைமை உள்ளது. ஆகவே தான் சூரியனில் சீற்றம் காணப்படுகிறது.

இது பல கோடி ஆண்டுகளாக நிகழ்ந்து வருவதாகும். சூரியனில் சீற்றம் ஏற்படும் போது சூரியனி லிருந்து ஆற்றல் மிக்க துகள்கள் அடங்கிய மொத்தை தூக்கி எறியப்படும். இது Coronal Mass Ejection (CME) எனப்படுவதாகும்.

கடந்த பல மாதங்களில் பல CME க்கள் தோன்றியுள்ளன. இவற்றிலிருந்து பூமியின் காந்த மண்டலம் நம்மை பாதுகாக்கிறது. தவிர, இந்த CME க்களால் பூமியைச் சுற்றுகின்ற செயற்கைக் கோள்கள், பூமியில் உள்ள மின் இணைப்பு கிரிட்கள், நிலத்துக்கு அடியில் உள்ள எண்ணெய், மற்றும் வாயுக் குழாய்களுக்கு சேதம் ஏற்படுமே தவிர, மக்களுக்கு எவ்விதப் பாதிப்பும் இல்லை.

பூமி அழியப் போகிறது. மக்கள் அழியப் போகிறார்கள் என்று பீதி கிளப்பப்படுவது இது முதல்தடவை அல்ல. 1806,1843, 1891, 1910, 1982, 1997, 1999 என கடந்த பல ஆண்டு களில் இப்படி பீதி கிளப்பப்பட்டது. ஆனால் எதுவும் நிகழ்ந்து விட வில்லை. இந்தத் தடவை இந்தபீதி பரவலாகப் பரவியுள்ளது. இன்ர நெற், பேஸ்புக் என்ற சாதனங்கள் மூலம்எளிதில் எதையும் பரப்ப முடி யும் என்பதே இதற்குக் காரணம்.

இப்படியான பீதி பரவும் போது பல சமூக விரோத செயல்கள் தோன்றும். மன உறுதியற்றவர்கள் தற்கொலை எண்ணத்தைப் பெறு வர். சில நாட்கள் தானே உயிரோடு இருக்கப் போகிறோம், அதற்குள் ளாக எல்லாவற்றையும் அனுபவித்து விட வேண்டும் என முறைகேடான செயல்களுக்கு தூண்டப்படுவோர் இருப்பர். (17ஆம் பக்கம் பார்க்க)




என்னைப் பற்றிய வதந்திகளை நம்பாதீர்கள்

## நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விபரம் வெளியிடப்படும்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விபரங்களை அம்பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என கபே என்னும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விபரங்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விபரங்களை அறிந்து கொள்ளும் உரிமை நாட்டு மக்களுக்கு காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையை உன்னிப்பாக அவதானிக்கின்றது சர்வதேசம்



(கொழும்பு)

நாட்டில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. உலகம் அழிவடையும் என்ற நோக்கத்தில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

நாட்டின் சகல துறைகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் நாடு எந்தத் திசை நோக்கி நகர்கின்றது என்பது பற்றிய குழப்பத்தில் மக்கள் ஆழ்ந்துள்ளனர்.

ஆசியாவின் ஆச்சரியம், நாடு முன்னோக்கி போன்ற தேவதை கதைகளை பிரச்சாரம் செய்தாலும், நாடு அதாள பாதாளத்தை நோக்கியே நகர்கின்றது.

நீதிமன்றக் கட்டமைப்பின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்துமாறு கோரி சட்டத்தரணிகள் போராடுகின்றனர்.

சர்வதேச சமூகம் மனித உரிமைப் பேரவை போன்றன நாட்டுக்கு எதிராக சதி செய்வதாக அரசாங்கம் குற்றம் சுமத்துகின்றது.

எனினும், சர்வதேச சமூகம் நாட்டின் விவகாரங்களில் தலையீடு செய்வதற்கான சந்தர்ப்பத்தை அரசாங்கமே ஏற்படுத்திக் கொடுப்பதாகக் கயந்த கருணாதிலக்க குற்றம் சுமத்தியுள்ளார்.


## வேதனப் பிரச்சினைக்குத் தீர்வு விரைவில் சுற்றுநிருபம்

(கொழும்பு)

தமது வேதனப் பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட சுற்று நிருபத்தை இந்த மாத இறுதிக்கு முன்னர் வெளியிட நிதியமைச்சின் செயலாளர் உறுதியளித்துள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. சங்கத்தின் பிரதான செயலாளர் பேராசிரியர் டெரன்ஸ் மதுஜீத் இதனைத் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சின் செயலாளர் பீ.பி ஜயசுந்தரவுடன் இது தொடர்பில் நேற்றுமுன்தினம் மாலை கலந்தரையாடல் இடம்பெற்றது.

இதன்போதே நிதியமைச்சின் செயலாளர் இந்த உறுதி மொழியினை வழங்கியதாகவும், டெரன்ஸ் மதுஜீத் தெரிவித்துள்ளார்.



ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் பெய்துவரும் மழை காரணமாக கண்டி ரயில் நிலையத்திலும் மழைவெள்ளம் புகுந்துள்ளதால் ரயில் போக்குவரத்துகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. ரயில் நிலையத்தின், களஞ்சிய அறை, கராஜ் மற்றும் மின்மாற்றி அறை என்பவற்றிலும் மழைநீர் நிரம்பியுள்ளதால், அந்த பணிகளும் முடங்கியுள்ளன.

## பாம்புகள் படையெடுப்பு பயப்பீதியில் மக்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தின் கீழுள்ள வாவியில் பெருந்தொகையான பாம்புகள் படையெடுக்க ஆரம்பித்துள்ளன.

கல்லடிப்பாலத்தின் கீழ பெருமளவிலான பாம்புகள் கடந்த திங்கட்கிழமை மாலை முதல் படை யெடுத்துள்ளன.

இந்த பாம்புகள் ஒவ்வொன்றும் இரண்டு மூன்று அல்லது நான்கு அடி நீளமானவைகளாக காணப்பட்டன.

இதற்கு முன்னரும் 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தம் ஏற்படுவதற்கு முன்னர் இவ்வாறு கல்லடிப்பாலத்தில் பெருந்தொகையான பாம்புகள் படையெடுத்தது.

இந்த ஆண்டு ஏற்பட்ட பாரிய வெள்ள அனர்த்தத்திற்கு முன்னரும் இவ்வாறு கல்லடிப்பாலத்திற்கு கீழும் பெருந்தொகையான பாம்புகள் படையெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## நாடாளுமன்ற முறைமைக்கு சவால் விடுக்க முடியாது

(கொழும்பு)



நாடாளுமன்ற முறைமைக்கு சவால் விடுக்க முடியாது என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அரசாங்க அச்சகப் பேரவையின் 56 ஆம் வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.


நிறைவேற்று அதிகாரமோ அல்லது நீதிமன்றக் கட்டமைப்போ நாடாளுமன்றத்திற்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கவோ அல்லது சவால் விடுக்கவோ முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனநாயகத்தின் உச்ச பொறிமுறைமையாக நாடாளுமன்றத்தை கருத முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் நீதியை நிலை நாட்டுவதே நீதிமன்றக் கட்டமைப்பின் முதன்மைக் கடமை எனவும், கொள்கை அடிப்படையிலான தீர்மானங்களில் நீதிமன்றம் தலையீடு செய்ய முடியாது.

நீதிமன்றக் கட்டமைப்பு அரசியல்மயப்படுத்தப்பட்டால் அது பாதகமான நிலைமையை ஏற்படுத்த வழிகோலும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இராணுவத்தை குறைக்க தீர்மானிக்கப்படவில்லை



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இராணுவத்தை குறைக்கவோ அல்லது கலைக்கவோ மாட்டார் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அண்மையில் வெளிநாடொனறு இராணுவத்தை குறைப்பது தொடர்பில் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பியுள்ளது.

இதன் போது இராணுவத்தை குறைக்கவோ அல்லது கலைக்கவோ தீர்மானிக்கவில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் படையினரை ஆக்கப்பூர்மான முறையில் நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்ற நமபிக்கை ஜனாதிபதிக்கு காணப்படுகின்றது.

தேசியப் பாதுகாப்பை உறுதி செய்வது முப்படையினரின் பிரதான கடமை என்ற போதிலும், முடிந்தளவு நாட்டின் அபிவிருத்திக்காக உதவிகளை வழங்கி வருகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

சிவில் பாதுகாப்பு அதிகாரிகளுக்கான நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது பாதுகாப்புச் செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## அமைச்சு பாதுகாப்பு பிரிவு பொலிஸ் அதிகாரிகளுக்கு பிணை

கொழும்பு இரவு காரோட்டப் பந்தயத்தின் போது நுழைவுச் சீட்டின்றி நுழைய முயற்சித்து கடமையிலிருந்த பொலிஸாருக்கு இடையூறு விளைவித்த அமைச்சு பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த இரு பொலிஸ் அதிகாரிகளையும் பிணையில் செல்ல கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியது.


கடந்த சனிக்கிழமை இரவு இடமபெற்ற மேற்படி காரோட்டப் பந்தயத்தின் போது இடையூறு விளைவித்த மேற்படி இரு பொலிஸ் அதிகாரிகளும் கைது செய்யப்பட்ட நிலையில் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களை தலா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல கோட்டை நீதவான் கனிஷ்க விஜேரத்ன அனுமதி வழங்கினார்.

மேற்படி இருவரும் நுழைவுச் சீட்டின்றி வந்ததை அடுத்து அவர்களை பந்தயம் இடம்பெறும் இடத்துக்குச் செல்ல பொலிஸார் அனுமதி மறுத்துள்ளனர். இதனால், கடமையிலிருந்த பொலிஸார் மீது இவ்விருவரும் கற்களை வீசித் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இந்நிலையில் கைது செய்யபட்ட சந்தேகநபர்கள் இருவரும், சட்ட மருத்துவரின் மதுபோதைப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

## அரசாங்க வாகனங்களுக்கு அரச முத்திரை அவசியம்



(கொழும்பு)

அனைத்து அரச வாகனங்களுக்கும் அரசாங்க முத்திரை கட்டாயம் ஒட்டப்பட்டிருக்க வேண்டும் என்று அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அமைசர் டபிள்யூ. டி. ஜே. செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்றறிக்கை சகல அரசாங்க நிலையங்களுக்கும், மாவட்ட செயலாளர் காரியாலயத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்க வாகனங்களை பொறுப்பின்றி பயன்படுத்துதல் மற்றும் சாரதிகள் அசாதாரண முறையில் வாகனங்களை பயன்படுத்துதல் தொடர்பில் பல் வேறுபட்ட பிரதேசங்களிலும் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அந்த முறைப்பாட்டினை அடுத்தே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பரீட்சைக்கு தோற்ற முடியாத மாணவர்களுக்கு மாற்றுத் திட்டம்

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக க.பொ.த சா/த பரீட்சைக்கு தோற்ற முடியாத மாணவர்களுக்காக மாற்று வேலைத் திட்டமொன்றை செயற்படுத்துமாறு கல்வி அமைச்சு பரீட்சைகள் திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

நாட்டின் பல பாகங்களில் பெய்துவரும் கடும் மழை காரணமாக நேற்று முன்தினம் நடைபெற்ற கணித பாட பரீட்சைக்கு பல மாணவர்களால் தோற்ற முடியாது போனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மாத்தளை - நாவுல பரீட்சை மத்திய நிலையத்தில் 18 மாணவர்களுக்கு இவ்வாறு பரீட்சை எழுத முடியாது போயுள்ளது.

பதுளை மீகஹகிவுல பகுதி மாணவர்கள் சிலருக்கு பரீட்சை எழுத முடியாது போயுள்ளது.

இந்த நிலையில் மழை காரணமாக பரீட்சைக்குத் தோற்ற முடியாத மாணவர்கள் குறித்து கவனம் செலுத்தியுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு.எம்.என். ஜே.புஸ்பகுமார தெரிவித்தார்.

எனினும் அம் மாணவர்களுக்கு எவ்வகையான திட்டத்தை செயற்படுத்துவது என்று இன்னும் தீர்மானிக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பொலன்னறுவை - பக்கமுன மகா வித்தியாலய பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுதிய 30 மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் வீடு செல்ல முடியாது போனது. அந்த மாணவர்களுக்கு தங்குமிட வசதி உணவு என்பன கொடுத்து நேற்று பரீட்சைக்கு அனுப்பி வைத்ததாக பொலன்னறுவை மாவட்ட செயலாளர் நிமல் அபேசிறி தெரிவித்துள்ளார்.

# இந்திய வீடமைப்புத் திட்டம்
# நெடுந்தீவு பிரதேசத்தில் மீளாய்வு



(நெடுந்தீவு)

இந்திய வீடமைப்புத் திட்டம் தொடர்பிலான கலந்துரையாடல் நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் இந்திய வீட்டுத்திட்டத்தின் நடைமுறைகள் தொடர்பாக விளக்கமளித்ததுடன், பயனாளிகள் தெரிவின் போது முறைகேடுகள் நிகழா வண்ணம் தெரிவினை மேற்கொள்வதுடன் பயனாளிகள் தெரிவு மீளாய்வு செய்யப்பட வேண்டுமெனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இக் கலந்துரையாடலில் பிரதேச செயலர் ஆ.சிறி, ஈ.பி.டி.பியின் நெடுந்தீவு பிரதேச இணைப்பாளர் தானியல் றெக்சியன் (றஜீவ்), இலங்கை செஞ்சிலுவைச் சங்க உத்தியோகத்தர், கிராம அலுவலர்கள், பயனாளிகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## அணிவகுப்பு

சாவகச்சேரி பொலிஸாருக்கான பரிசோதனை அணிவகுப்பு எதிர்வரும் சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு நுணாவில் சரஸ்வதி வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# பயனாளிகள் தெரிவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இந்திய வீட்டுத்திட்டத்திற்கென பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக்கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியமர்ந்துள்ள நிலையில் வீட்டுத்திட்ட வசதிகள் இன்றி பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வந்தநிலையில் வீட்டுத்திட்ட வசதிகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராமத்தில் 26 பயனாளிகளும், முள்ளிவாய்க்கால் மேற்கில் 37 பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (04)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வகுப்பறை முகாமைத்துவ பயிற்சி



(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரியின் தொழில்சார் கற்கை நெறி பிரிவினரின் ஏற்பாட்டில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முன்பள்ளி வகுப்பறை முகாமைத்துவ பயிற்சிப்பட்டறை நேற்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகி இன்றும் நாளையும் யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சிப் பட்டறையில் வடமாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்கள் இதில் கலந்து கொண்டு இப்பயிற்சியைப் பெற்று வருகின்றனர்.

3 நாட்கள் நடைபெறும் இப்பயிற்சிப் பட்டறையில், அமெரிக்க முன்பள்ளி சமூகத்தின் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சித் திட்டத்தின் பயிற்சியாளரான எலிசபெத் துரை வளவாளராகக் கலந்து கொண்டு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான குறித்த பயிற்சிகளை வழங்கி வருகின்றார்.

இப்பட்டறையில் ஆசிரியர்களுக்கான கற்பித்தல் முறைகள் வகுப்பறை முகாமைத்துவம், மாணவர்களுடனான அணுகுமுறை போன்ற முன்பள்ளி கற்பித்தல் செயற்திட்ட முறைகள் பற்றி குழுவாகவும் பயிற்சி மூலம் விளக்கமளிக்கப்படுகிறது.

மேலும் இப்பயிற்சிப் பட்டறை ஆங்கில மொழி மூலமே விளக்கமளிக்கப்படுவதுடன் இப்பயிற்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கற்பித்தல் செயற்பாட்டில் பூரண அறிவும், செயற்பாட்டுத்திறனும் பெறப்படுவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்பி, 20)


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர்
தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்... 20.12.2012



- தமிழ் மக்களின் காதில் பூச்சுற்றும் போராட்டம்
- அவுஸ்ரேலிய பயணங்களின் பிரதிபலிப்பான விநோதங்கள்!
- அயராது உழைக்கும் ஜப்பானியர்கள்
- கலாசார யுத்தம் திணிக்கப்படுகிறதா?



ஓய்வில்லா வேட்டை

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு – சுவை – சுவாரசியம் அதுதான் தினமுரசு

# போராடித் தோற்றது இலங்கை

(ஹோர்பட்)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி போராடித் தோல்வியடைந்துள்ளது.


இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி நேற்று அவுஸ்ரேலியாவின் ஹோர்பட்டில் நிறைவடைந்தது.

இதில் 393 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு ஆடிய இலங்கை அணி, இரண்டு விக்கெட்டை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஐந்தாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது. இதில் சங்கக்கார, சமரவீர ஆகியோர் பொறுப்பாக ஆடித் தோல்வியைத் தவிர்க்கும் வகையில் போராடினார்கள். இருப்பினும், பீற்றர் சிடில், ஸ்ராக் ஆகியோரின் வேகப்பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறிய இலங்கை அணி போட்டி நிறைவடைய 10 ஓவர்கள் இருக்கும் நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் அவுஸ்ரேலிய அணி 137 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இலங்கை அணி சார்பாக துடுப்பாட்டத்தில் சங்கக்கார 226 பந்துகளை எதிர்கொண்டு ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 63 ஓட்டங்களையும், சமரவீர 140 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 49 ஓட்டங்களையும் பெற்று முடிந்தவரை போராடினார்கள். மற்றும் கருணரட்ண 30, பிரசன்ன ஜெயவர்த்தன 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ராக் 63 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், பீற்றர்சிடில் 50 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக இரு இனிங்ஸிலும் ஒன்பது விக்கெட்டுக்களை வீழ்த்திய பீற்றர்சிடில் தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் அவுஸ்ரேலிய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸ் 450/5. இரண்டாவது இனிங்ஸ் 278. இலங்கை முதல் இனிங்ஸ் .336.





## பந்தை சேதப்படுத்திய பீற்றர் சிடில்



இலங்கை அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின்போது அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பீற்றர் சிடில் பந்தைச் சேதப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இலங்கை அணியின் முதலாவது இனிங்ஸின் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 248 ஓட்டங்களுடன் காணப்படும் போதே இது இடம்பெற்றுள்ளது.


போட்டியின் போது ஒளிபரப்பான காட்சிகளின் அடிப்படையில் பந்தினை பீற்றர் சிடில் தனது நகத்தைப் பயன்படுத்தி சேதப்படுத்துவது போன்று காணப்பட்டது. கிரிக்கெட் விதிகளின் படி இது தவறாகும். இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த இலங்கைக் கிரிக்கெட் அணியின் முகாமையாளர் சரித் சேனநாயக்க, அதுகுறித்த வீடியோ காட்சி தங்களிடம் காணப்படுவதாகவும், அனைவரும் அதைப் பார்வையிட முடியும் எனவும் தெரிவித்தார். அத்தோடு இதுகுறித்துப் போட்டி மத்தியஸ்தரிடம் அவர் உத்தியோகப்பூர்வமற்ற முறையில் முறையிட்டுள்ளார்.

## ஆஷஸைவிட மேலான வெற்றி

(நாக்பூர்)

இன்று சிறப்புக்குரிய நாள். இது சிறப்பான பயணம். இந்திய மண்ணில், இந்திய அணியை வென்றமை அவுஸ்ரேலியாவில் ஆஷஸ் தொடரை வென்றதைவிட மேலான வெற்றியாகக் கருதுகிறோம் என இங்கிலாந்து அணிக் கப்டன் குக் தெரிவித்தார்.

இந்திய மண்ணில் பெறப்பட்ட இந்த டெஸ்ட் தொடர் வெற்றி எனது மனதில் எப்பொழுதும் நிலைத்து நிற்கும். சாதனைக்குரிய இந்த வெற்றியை சிறப்பாக கொண்டாடுவோம். துடுப்பாட்டத்திற்குச் சாதகம் இல்லாத நிலை இருந்தாலும் ட்ரொட், இயன்பெல் ஆகியோர் நிலைத்து நின்று பொறுமையாக ஆடினார்கள். கப்டனாக எனது முதல் பயணத்தில் தொடரை வென்றது பெருமை அளிக்கிறது. எங்களது பந்து வீச்சாளர்கள் புத்திசாலித்தனமாக செயற்பட்டார்கள். துடுப்பாட்ட வீரர்களும் நல்ல பங்களிப்பை அளித்தார்கள். ஒட்டுமொத்தத்தில் ஒரு அணியாக எமது செயற்பாடு திறன்பட வெளிப்பட்டதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



## வினையில் முடிந்த இந்தியாவின் திட்டம்

(லண்டன்)

பந்துகள் திரும்பும் ஆடுகளங்களைத் தயாரித்து விட்டால் போதும் இங்கிலாந்தை வீழ்த்தி விடலாம் என்ற இந்தியாவின் அசட்டுத் துணிச்சல் அவர்களுக்கே வினையாக முடிந்தது என்று முன்னாள் இங்கிலாந்து கப்டன் நாசர் ஹூசைன் தெரிவித்துள்ளார். இந்தியாவில், இந்திய அணியை நான் இவ்வாறு பார்த்ததில்லை, இரு அணிகளிலிருந்தும் வீரர்களை தேர்வு செய்யக்கோரினால் இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் அனைவரையும் தேர்வு செய்வேன். இந்தியாவில் இந்திய சுழற்பந்து வீச்சாளர்களை விட இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக வீசினர். இங்கிலாந்து அணி உடல், மனோரீதியாக மிகவும் பலமாக இருந்தது. டெஸ்ட் கிரிக்கெட் மீது இங்கிலாந்துக்கு அபரிமிதமான ஆர்வம் இருப்பதை இந்த வெற்றி காட்டுகிறது. கடைசி நாளன்று இந்தியா விக்கெட்டுகளை வீழ்த்தத் திணறியது. ஒரு போட்டியில் வென்றவுடன் பந்துகள் திரும்பும் ஆடுகளத்தைப் போட்டால் போதும் இங்கிலாந்து மடிந்து விடும் என்று இந்தியா நினைத்து விட்டது. இந்திய அணி அளவுக்கதிகமான ஆர்ப்பாட்டங்களை காண்பித்தது, அதாவது வெற்றுத் துணிவைக் காட்டியுள்ளது. அதற்கான விலையே இந்தத் தோல்வி எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.





மும்பையில் நேற்று முன்தினம் நடந்த தனியார் விருது வழங்கும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற இந்திய ரென்னிஸ் நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சாவைக் காணலாம்.

## பொறுப்பற்ற செயற்பாடே தோல்விக்கு காரணம்



(நாக்பூர்)

வேகப்பந்து வீச்சாளர்கள் மற்றும், துடுப்பாட்ட வீரர்களின் பொறுப்பற்ற செயற்பாடே இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரை இழக்கக் காரணம் என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்தார்.

இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரை இழந்ததற்கு துடுப்பாட்ட வீரர்கள் மற்றும் வேகப்பந்து வீச்சாளர்களே காரணம். சுழற்பந்து வீச்சாளர்கள் தங்களது பணியைச் சிறப்பாகவே செய்தனர். 4 போட்டிகளிலும் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் ஆண்டர்சன் சிறப்பாகவே பந்து வீசினார். வேகப்பந்து வீச்சுக்குச் சாதமாக ஆடுகளம் இல்லாதபோதும் அவர் அற்புதமாகச் செயற்பட்டார். ஆனால் எமது வேகப்பந்து வீச்சாளர்கள் சராசரியாகவே இருந்தனர். அதேபோல் அதிக ஓட்டங்கள் குவிக்காததும் தொடரில் பின்தங்கியதற்கு முக்கியக் காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தலைமைக்கு ஹோலி தகுதியானவர்

(நாக்பூர்)

ஹோலி தன்னம்பிக்கையுள்ள ஒரு வீரர். அவரிடம் போராடும் குணம் இயல்பாகவே உள்ளது. அந்த வகையில் இந்திய அணியின் அடுத்த தலைவராக அவரை நியமிக்கலாம் என சுனில் கவாஸ்கர் தெரிவித்தார்.

நாக்பூர் டெஸ்டின், நான்காவது நாள் வரை, டோனிக்கு மாற்று வீரர் யாரும் இல்லை என்று தான் கூறினேன். ஆனால், ஹோலி சதம் அடித்த பின், இவரிடம் உள்ள திறமை வெளிப்பட்டுள்ளது. என்னைப் பொறுத்தவரையில், இவர் கப்டன் பதவிக்கு தயாராகிவிட்டார். இங்கிலாந்து அணி சிறப்பாக துடுப்பாட்டம் செய்தது. எமது பந்து வீச்சாளர்கள் திறமையில்லாமல் இருந்தனர். தவிர, துடுப்பாட்ட வீரர்களும் எதிர்பார்த்த அளவிற்கு செயற்படவில்லை.

இந்திய அணியை விட, இங்கிலாந்து அணியினர் சிறப்பாக விளையாடுவார்கள் என நான் சிந்தித்து பார்க்கவில்லை. அஹமதாபாத் டெஸ்டில் தோற்றவுடன், அவர்கள் நம்பிக்கை இழக்கவில்லை. அதிக உழைப்புடன் வெற்றி பெற்றுள்ளனர். எந்தவொரு வீரரும் எந்தளவிற்கு, விளையாட்டை உற்சாகத்துடன் விளையாடுகிறார்கள் என்பது முக்கியம். களத்தடுப்பு போன்றவற்றில் எப்போது உற்சாகம் குறைகிறதோ, அப்போது விலகிவிட வேண்டும். இது எப்போது, நடக்கும் என்பது சச்சினுக்குத்தான் தெரியும். இவருக்கு இத்தொடர் சிறப்பாக அமையவில்லை. அவுஸ்ரேலியா தொடருக்கு முன், இவர் எதிர்காலம் பற்றி முடிவெடுப்பார் என நினைக்கிறேன்.

## வென்றது பார்சிலோனா



(கட்டலோனியா)

அத்லெட்டிகோ மாட்ரிட் அணிக்கு எதிரான லா லிகா கால்பந்து தொடரின் லீக் போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் நடந்த லா லிகா கால்பந்து தொடரின் லீக் போட்டியில் பார்சிலோனா, அத்லெட்டிகோ மாட்ரிட் அணிகள் மோதின.

முதல் பாதியில் அத்லெட்டிகோ மாட்ரிட் அணியின் ரடாமல் பால்கோ (31ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். பார்சிலோனா அணிக்கு அட்ரியானோ (36), செர்ஜியோ (45) ஆகியோர் கோல் அடித்தனர். இதனால் முதல் பாதியில் 2-1 பார்சிலோனா அணி முன்னிலை பெற்றது.

பின் இரண்டாவது பாதியில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அணிக்கு நட்சத்திர வீரர் மெஸ்சி (57, 88) இரண்டு கோல் கொடுத்தார். இதற்கு மாட்ரிட் அணி வீரர்களால் பதிலடி கொடுக்கமுடியவில்லை. முடிவில் பார்சிலோனா அணி 4-1 என வெற்றி பெற்றது.

## விளையாட்டுச் செய்திகள்

# கிண்ணம் வென்றது நெடுந்தீவு சென். ஜோன்ஸ் 'ஏ'



(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட அணி களுக்கிடையில் நடத்தப்பட்ட கால்பந்துத் தொடரில் சென். ஜோன்ஸ் 'ஏ' அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

நெடுந்தீவுப் பிரதேசத்தில் கால்பந்தாட்ட வீரர் களின் திறனை வளர்ச்சி அடையச் செய்யும் நோக்கில் கால்பந்தாட்டத் தொடர் நடத்தப்பட்டது. இதில் முதல் சுற்று ஆட்டங்கள் லீக் முறையி லும் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் விலகல் முறையிலும் இடம்பெற்ற இப்போட்டித் தொடரில் நெடுந்தீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த பல அணிகள் பங்குபற்றின.

இருப்பினும் இதன் இறுதிப் போட்டிக்கு சென். ஜோன்ஸ் 'ஏ' அணியும், 'சி' அணியும் தகுதி பெற்றன.

இதன் இறுதிப் போட்டி கடந்த 14ஆம்திகதி பிற்பகல் 4.00 மணிக்கு நெடுந்தீவு சீக்கி ரியாம்பள்ளம் மைதானத்தில் நடைபெற்றது.

ஒரே கழகத்தைச் சேர்ந்த இரு அணிகள் இறுதிப் போட்டியில் மோதியதால், ஒவ்வொரு வீரர்களின் பலம், பலவீனம் என்பவற்றை மிக நன்றாக இரு அணி வீரர்களும் புரிந்துகொண்டு அதற்கேற்ற வியூகங்களுடன் களமிறங்கினர். ஆரம்பமே 'ஏ' அணிக்கு அதிர்ச்சி அணிக்கும் வகையில் 'சி' அணியினர் முதலாவது கோலைப் போட்டு முன்னிலை வகித்தனர். சின்னப்பொடியன் என்று பார்த்தால், எங்களுக்காக உங்கள் திறமையைக் காட்டுறியள். இனி நாங்கள் தாறம் நீங்க வாங் குங்கோ என 'ஏ' அணியினர் பதில் கோல் அடித்து போட்டியை சமப்படுத்தினர். முற் பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, 1-1 என்ற சமநிலையில் இருந்தது. பிற்பாதி ஆட்டத்தில் வேகம் கொண்ட 'ஏ' அணியினர் அடித்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு அணியின் ஸ்திரத்தன்மையை அதிகரித் தனர். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் 'சி' அணியினரும் கடும் முயற்சி மேற்கொண்டதன் பயனாக இரண்டாவது கோலையும் போட்டுக் கொண்டனர். இதனைத் தொடர்ந்து இரு அணி களுமே மேலதிகமான கோலைப் போட்டுக் கொள் ளும் முனைப்புடன் மூர்க்கமாக மோதிக் கொண்டனர். இந்நிலையில் போட்டி நிறைவுக்கு வந்தததது. இறுதியில் 3-2 என்ற கோல் கணக்கில் சென். ஜோன்ஸ் 'ஏ' அணியினர் வெற்றி பெற்றுக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். இப் போட்டித் தொடரில் அதிக கோல் அடித்த வீரர் விருதை சென். ஜோன்ஸ் 'ஏ' அணி வீரர் அன்ரனி பெனாடே பெற்றுக் கொண்டார்.

இப்போட்டி நிகழ்வின் விருந்தினராக நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தா. றெக்சியன், நெடுந் தீவு பிரதேச செயலக பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் செல்வி அன்னபாக்கியம் மற்றும் அரச உத்தியோகத்தர்கள், ஏனைய விளையாட் டுக்கழகத்தைச் சேர்ந்த வீரர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# சாரணர் போஜன் நினைவு மென்பந்து சென். அன்ரனீஸ் சம்பியன்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சாரணர் அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டியில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

சாரணர் போஜன் ஞாபகார்த்த நிதியத்தினால், வடமாகாண சாரணிய அணிகளுக்கிடையில் 6 பேர், 6 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி கடந்த வாரம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென்.அன்ரனீஸ் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கிளி நொச்சி முருங்கன் கல்லூரி, தொண்டைமானாறு வீரகத்தி வித்தியாலயம், வவுனியா சாரண அணி உள் ளிட்ட சாரணர் அணிகள் மேற்படி சுற்றுப்போட்டியில் பங்கு பற்றின.

இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம்மத்திய கல்லூரி சாரண அணியும், ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் சாரண அணியும் மோதியது. இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஊர்காவற்றுறை சாரண அணி 6 ஓவர்களில் 80 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சாரண அணி 70 ஓட்டங்களை மாத்திரம் பெற்று, 10 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

# அரையிறுதியில் நண்பர்கள், கொலின்ஸ்

(யாழ்ப்பாணம்)

ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் கால் பந்துத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு அல்வாய் நண்பர்கள், கொலின்ஸ் அணிகள் தகுதிபெற்றுள்ளன.


ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 46 விளையாட்டுக் கழகங்களுக் கிடையில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன் றினை நடத்தி வருகின்றது.

இப்போட்டித் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் அண்மையில் ஆதிசக்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

சுற்றுப்போட்டியின் காலிறுதி ஆட்டம், தற்போது நடைபெற்று வருகின்றது. மேற்படி காலிறுதி ஆட்டத்தில் ஊரெழு றோயல்ஸ் அணியினை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் மோதியது. இப்போட்டியில் அல்வாய் நண்பர்கள் அணி சமநிலை உதைப்பு மூலம் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

இரண்டாவது காலிறுதி ஆட்டத்தில் பொலிய பாரதி விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. இப்போட்டியில் ஆரம்பம் முதலே கொலின்ஸ் அணி ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் கொலின்ஸ் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

ஏனைய இரண்டு காலிறுதிப் போட்டியும் விரைவில் இடம்பெறவுள்ளதாகவும், இப்போட்டித் தொடரில் கிண்ணம் வெல்லும் அணிக்கு பெறு மதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் என்றும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# இரண்டாவது டெஸ்டில் கிளார்க் சந்தேகம்

இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டிகளிலும் அவுஸ்ரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹோபார்ட்டில் இடம்பெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க், காலில் உபாதைக்குள்ளாகியதையடுத்தே இந்தச் சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. பின்தொடைப் பகுதியில் ஏற்பட்ட உபாதையையடுத்து மைக்கல் கிளார்க் மைதானத்தை விட்டு வெளியேறியிருந்ததோடு, அதன் பின்னர் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியிருக்கவில்லை. அவுஸ்ரேலிய அணி களத்தடுப்பிலீடுபடும் போது அவர் களத்தடுப்பிலீடுபட்ட போதிலும், உபாதையில் சிறிது தடுமாறியிருந்தார்.

இந்நிலையில் 26ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள பொக்சிங் டே டெஸ்ட் போட்டியில் மைக்கல் கிளார்க் சில சமயங்களில் பங்குபற்றமாட்டார் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகவலை அவுஸ்ரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தர் உறுதிப்படுத்தினார்.



யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் அங்கத்துவ அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில், இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியைக் காணலாம். இப்போட்டித் தொடரில் மயிலங்காடு ஞானமுருகன் அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# இராணுவத்தில் சேர்ந்த பெண்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியவர்கள் யார்?

- பி. இரயாகரன் கட்டுரையிலிருந்து.



யாழ்மேலாதிக்க இனவாத குறுந்தேசிய ஊடகங்களும், அரசியல்வாதிகளும் சேர்ந்துதான், இந்தப் பெண்களை "பாலியல் வல்லுறவுக்கு" உள்ளாக்கினர். இப்படி அவமானகரமாக தங்கள் மேல் சுமத்திய இந்தக் கறையை, இந்த ஆண்டாதிக்க அமைப்பில் அந்தப் பெண்கள் வெளுத்துக் காய வைக்க முடியாது. இராணுவத்தை விட மிக மோசமான அரசியல் நடத்தை கொண்டவர்களாக, அந்தப் பெண்களை தாமே ஊடகங்கள் மூலம் பாலியல் துஷ்பிரயோகம் செய்து உலகுக்கு காட்டி இருக்கின்றனர். "உண்மையில் தாம் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற வகையில் அடிக்கடி ஊடகங்களில் வரும் செய்திகள் தம்மை மிகவும் மோசமாகப் பாதித்திருப்பதாகவும், உண்மையில் அப்படியான நிகழ்வுகள் எதுவும் தமக்கு ஏற்படவில்லை" என்றும் இந்த யாழ்மேலாதிக்க இனவாத தேசியவாதிகளுக்கு எதிராக, அந்தப் பெண்கள் அழுது புலம்பி இருக்கின்றனர். எந்த மக்கள் சார்ந்து தாம் அக்கறையுடன் இருப்பதாக நடிக்கின்றனரோ, உண்மையில் அந்த மக்களுக்கு எதிராகவே தாம் செயல்படுவதையே இந்த நிகழ்வுகள் மூலம் மறுபடியும் அம்பலமாக்கி இருக்கின்றனர்.

புலி மாபியாக்கள் முதல் பாராளுமன்ற குறுந்தேசிய பன்றிகள் மட்டுமல்ல, 2009 இல் திடீர் மார்க்சியவாதிகளாக காட்டிய மார்க்சியப் புரட்டுவாதிகள் வரை, எந்த வேறுபாடுமின்றி தமிழ் மக்கள் முன் தமிழ் பெண்களை வன்புணர்ந்து காட்டி அரசியல் செய்து இருக்கின்றனர். அரசியல்ரீதியான வங்குரோத்தினாலான அரசியல் வெட்டுமுகம் இது.

இங்கு பெண்ணியம், பெண் விடுதலை பற்றி பேசுவோரை கூட காணவில்லை. கவிதைக்குள், சொல்லுக்குள் பெண்ணியம் செத்துக் கிடக்க, பெண்ணுக்கு எதிராக இவை அரங்கேறுகின்றது.

இதற்கு எதிராக போராடத் தொடங்கிய போது, மதில் மேல் ஓணான் ஆகவே அனைவரும் தம்மை மாற்றிக்கொண்டனர். இந்த விடயத்தை இந்த எல்லைக்குள் அணுகும் அளவுக்கு, அனைவரின் அரசியல் நேர்மையையும் மறுபடியும் கேள்விக்கு உள்ளாக்கி இருக்கின்றது.

திடீரென இன்று பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியவர்கள் முதல் பலரும் "இராணுவத்தில் சேர்ந்த பெண்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகவில்லை" என்ற பி.பி.சி. மூலம் டாக்டர் சிவதாஸ் சொன்ன செய்தியின், ஒரு பகுதியை மீளச் சொல்லுகின்ற விடயத்துக்குள் இதை அமுக்கி மூடிவிடவும் முனைகின்றனர். யாழ் மேலாதிக்க குறுந்தேசிய தமிழ் இனவாதிகள், அந்த பெண்களைப் பாலியல்ரீதியாக இராணுவம் வன்முறைக்கு உளாக்கியதாக இட்டுக்கட்டிய போது, இதற்கு எதிராக எமது அமைப்பு அம்பலப்படுத்தி போராடியது. அப்போது எம்மை பற்றி "பெண்களுக்கு எதிரான வன்முறை எனப் பிரச்சாரம் மேற்கொள்ளும் இலங்கை அரச ஆதரவுக் கும்பல்கள்" என்று அவதூறு முத்திரையைக் குத்தினர்.

இதன் மூலம் "பெண்களுக்கு எதிரான வன்முறை"யை திட்டமிட்டு செய்தவர்கள் இவர்கள் என்பது வெளிப்படையானது. அந்தப் பெண்களின் வாழ்வை அழித்தவர்கள் இவர்கள்தான். அந்தப் பெண்கள் தங்கள் மேலான கறையை இனி நீக்க முடியாது. இராவணனிடமிருந்து மீண்ட சீதையின் "கற்பு" பற்றி இராமன் சந்தேகித்து, தீ குளிக்கக் கூறிய அதே கதைதான் இங்கும். அவர்கள் வாழ்வு முழுவதும் தொடரும்.

இங்கு "மார்க்சியம்" பேசும் யாழ்மேலாதிக்க இனவாத வெள்ளாளர்கள் தங்கள் இந்த ஒழுக்கக் கேட்டை அரசியல் மயப்படுத்தினர். அவர்கள் அரசியல் மொழியில் சொன்னால் "பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளை செய்திகளாக்கி இலங்கை அரசை அம்பலப் படுத்தாமல் மூடி மறைக்கச் சொல்கிறார்கள்." என்று கூறி, இந்தக் குற்றத்தை அரசியலாக முன்மொழிந்தனர். நாம் துரோகியாக்கப்பட்டோம்.

உண்மையில் இவர்கள் தான் இராணுவத்தில் சேர்ந்த பெண்களை, தங்கள் ஊடகங்கள் மூலம் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினர். இதை நாம் அம்பலப்படுத்திய போது "இராணுவத்திற்கு புனிதச் சான்றிதழ் வழங்கும் முகமிலிகளான இந்தக் கும்பல்கள் இலங்கை அரசின் புலம்பெயர் நீட்சிகளே" என்று கூறினர். அது மட்டுமா தங்கள் ஊடகங்கள் மூலம் நடத்திய பாலியல் துஷ்பிரயோகத்தை உண்மை என்று கூற நியாயப்படுத்தியவர்கள் இவர்கள்.

இந்த நிலையில் தான் "உண்மையில் தாம் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற வகையில் அடிக்கடி ஊடகங்களில் வரும் செய்திகள் தம்மை மிகவும் மோசமாகப் பாதித்திருப்பதாகவும், உண்மையில் அப்படியான நிகழ்வுகள் எதுவும் தமக்கு ஏற்படவில்லை என்றும் அந்தப் பெண்கள் தன்னிடம் கூறியதாகவும்" அதை தமிழ் மக்களுக்கு கூறும்படி அந்த பெண்கள் கேட்டதாக கூறிய டாக்டர் சிவதாஸ், அதை பேட்டி அளிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இந்த வகையில் அந்தப் பெண்களைப் பாதித்த விடயங்களில் ஒன்று தான் "தாம் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம்" என்று ஊடகம் நடத்திய பாலியல் வல்லுறவு என்ற செய்தி. உண்மையில் அந்தப் பெண்களின் உளவியல் வெளிப்பாடு, தம்மைப் பற்றி இட்டுக்கட்டிய செய்தியை போட்டு தம்மை பாலியல் வல்லுறக்கு உள்ளாக்கி அழகு பார்த்த அரசியலுக்கு எதிரானதாகும். யாழ்மேலாதிக்க இனவாத தேசியத்தை அரசியலாக முன்னெடுக்கும் ஊடகங்களுக்கும், அரசியல் வாதிகளுக்கும் எதிரான, பெண்களின் உளவியல் தான் வெடித்துக் கிளம்பியிருந்தது. ஊடகங்களினதும், அரசியல் வாதிகளினதும் இந்த ஈனமான வக்கிரமான செயலை டாக்டர் சிவதாஸ் பி.பி.சி பேட்டியில் கூறிய போதும், அனைவரும் இந்தக் குறிப்பை தணிக்கை செய்திருக்கின்றனர். என்ன ஊடகத் தர்மம்.

இதில் விசித்திரம் என்னவென்றால் டாக்டர் சிவதாஸ் மருத்துவராக நேர்மையாக இதைச் சொல்ல முடியவில்லை என்பது தான். தன்னை "இராணுவ கைக்கூலியாக" முத்திரை குத்தி விடுவார்கள் என்ற அச்சம் அவருக்கு இருந்துள்ளது. இதனால் தான் அவர் தன் பேட்டியில் "தான் தமிழ் தேசியத்தை ஆதரிப்பவன்" என, இதற்குள் கட்டாயம் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அத்துடன் தனது தனிப்பட்ட கருத்தைச் சொல்ல வேண்டியும் ஏற்பட்டது. "இராணுவம் இவ்வளவு அவசரமாக பெண்களை பணிக்கு சேர்த்ததில் தனக்கு உடன்பாடு இல்லை என்கின்ற போதிலும், ஒரு மருத்துவன் என்ற வகையில் இந்தப் பெண்கள் எந்த வகையிலும் பாலியல் ரீதியாக துன்புறுத்தப் படவில்லை என்பதை உலகுக்கு சொல்ல வேண்டிய கடமை தனக்கு உண்டு என்றும் டாக்டர் சிவதாஸ் தெரிவித்துள்ளார்."

இன்று நேர்மையாக வாழ்வதும், உண்மையைச் சொல்வதும் என்பது யாழ்மேலாதிக்க இனவாத தமிழ் தேசியத்தின் முன் இலகுவான விடயமல்ல. தமிழ்ப் பெண்களை பலியிட்டு நடத்தும் இந்த அரசியல் யாருக்கு? இந்த அரசியல் மனப்பாங்கு எங்கிருந்து ஏன் உருவாகின்றது? இதுதான் நாம் இன்று கேட்க வேண்டிய சிந்திக்க வேண்டிய விடயம்.







## சுக வாழ்வின் பத்து விதிகள்

| | |
|---|---|
| உணவைக் குறை | - அதிகமாகக் கடித்து உண் |
| சவாரியைக் குறை | - அதிகமாய் நட |
| உடையைக் குறை | - அதிகமாய்க் குளி |
| கவலையைக் குறை | - அதிகமாய் வேலை செய் |
| சோம்பலைக் குறை | - அதிகமாய் விளையாடு |
| பேசுவதைக் குறை | - அதிகமாய்ச் சிந்தி |
| திரிவதைக் குறை | - அதிகமாய்த் தூங்கு |
| செலவைக் குறை | - அதிகமாய்த் தானம் செய் |
| திட்டுவதைக் குறை | - அதிகமாய்ச் சிரி |
| உபதேசத்தைக் குறை | - அதிகமாய் அனுஷ்டி |

## நாய்கள்...




◆ டோக்கியோவில் நாய்களுக்கென்றே தனி ஹோட்டல் உள்ளது.

◆ விலங்குகளில் அதிக பற்களைக் கொண்டது நாய் (48 பற்கள்).

◆ நாய் 12 ஆண்டுகளில் முதுமை அடைந்து விடும்.

◆ அவுஸ்திரேலியாவில் காணப்படும் "டிங்கோஸ்" என்ற வகை நாய் குரைப்பதே இல்லை.

◆ வாசனையைக் கண்டறிவதற்காக ஒவ்வொரு உயிரினங்களுக்கும் உணர்வுக் கலங்கள் உள்ளன. மனிதனுக்கு சுமார் 60 மில்லியன் கலங்கள் உள்ளன. நாய்களுக்கோ சுமார் 250 மில்லியன் கலங்கள் உள்ளன. அதனால்தான் நாய்களுக்கு மோப்ப சக்தி அதிகமாக இருக்கிறது.

# சினிமா சினிமா


◗ சமீப காலமாக விழாக்களில் கலந்து கொள்வதைத் தவிர்த்து வந்த சிம்பு, நீண்ட இடைவெளிக்குப் பிறகு - சந்தானம், பவர்ஸ்டார்



சீனிவாசன் நடித்துள்ள "கண்ணா லட்டு தின்ன ஆசையா" படத்தின் பாடல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டார். "என்ன திடீரென்று விழாவுக்கு" என்று கேட்டபோது... "நான் கலந்துகொள்ளும் விழாக்களில் சில உண்மைகளைப் பேசிவிடுகிறேன். உடனே என்னை திமிர் பிடித்தவன் என கூறுகிறார்கள். உண்மையைச் சொன்னால் திமிர் பிடித்தவனா? இந்தப் பட விழாவுக்கு வந்ததற்குக் காரணம் சந்தானத்தின் நட்புதான்" என்றார். தான் இயக்கிய "மன்மதன்" படத்தின் மூலம்தான் சந்தானத்தை சினிமாவில் அறிமுகப்படுத்தினார் சிம்பு.

◗ 1,200 படங்களுக்கு மேல் நடித்து, கின்னஸ் சாதனை நடிகையான மனோரமா, சிறிய இடைவெளிக்கு பின், ஹரி இயக்கும், சிங்கம் - 2 படத்தில் நடிக்கிறார். மேலும், 1975இல், குன்வாராபாப் என்ற ஹிந்தி படத்தில் நடித்தவர், 37 ஆண்டுகளுக்கு பின், மீண்டும் ஹிந்தியில் ஷாருக்கான் நடிக்கும், சென்னை எக்ஸ்பிரஸ் படத்தில் நடிக்கிறார்.

◗ பொதுவாக ஒரு படத்துக்கு முப்பது நாள்களுக்கு மேல் கால்ஷீட் கொடுக்க மாட்டார் அனுஷ்கா. அப்படிப்பட்டவர் செல்வராகவனின் "இரண்டாம் உலகம்" படத்துக்கு அறுபது நாள் கால்ஷீட் கொடுத்தது திரையுலகில் பலரையும் ஆச்சரியப்பட வைத்தது. ஆனால் இப்போது அந்த சாதனையையும் முறியடித்திருக்கிறார். தமிழ், தெலுங்கில் தயாராகும் "ராணி ருத்ரம்மாதேவி" படத்துக்காக 150 நாட்களுக்கு கால்ஷீட் கொடுத்திருக்கிறார் அனுஷ்கா. பதின்மூன்றாம் நூற்றாண்டில் நடைபெற்ற உண்மைச் சம்பவத்தைப் பின்னணியாகக் கொண்டு உருவாகும் இந்தப் படத்தை தெலுங்கின் பிரபல இயக்குநர் குணசேகர் இயக்குகிறார். இளையராஜா இசையமைக்கிறார்.



◗ பிரியாணி படத்தில், தான் இருக்கும்போதே இன்னொரு ஹொலிவுட் நடிகையையும் இணைத்திருப்பதால், அதிர்ச்சியடைந்திருக்கிறார் ஹன்சிகா. அதனால், டைரக்டர் வெங்கட் பிரபுவிடம், "ஹொலிவுட் நடிகைக்கு முக்கியத்துவம் கொடுத்து, படத்தில் என்னை டம்மியாக்கி விடாதீர்கள்... அப்படித் தெரிந்தால், படத்திலிருந்து விலகி விடுவேன்..." என்றும் மறைமுக மிரட்டல் விடுத்துள்ளாராம் ஹன்சிகா.

◗ 1958ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை தன்னுடைய எழுத்தில் இளமையைக் குன்றவிடாமல் கட்டுக்கோப்பாக வைத்திருக்கும் வாலி, உலகிலேயே அதிகமாகத் திரைப் பாடல்களை எழுதிய பெருமைக்குரியவர். கதை விவாதம், பாடல் உருவாக்கம் என்ற பெயரில் நினைத்தவுடன் வெளிநாடுகளுக்குச் சென்றுவரும் சினிமாக் காரர்கள் மத்தியில் வாலி வித்தியாசமானவர். இதுவரை இந்தியாவைத் தாண்டி எந்த ஒரு வெளிநாட்டுக்கும் பயணம் செய்ததில்லை. அவரிடம் பாஸ்போர்ட் கூட இல்லையாம்.



◗ மம்மூட்டி, ஜெயராமை தொடர்ந்து, மோகன்லாலும், தமிழில் அதிக படங்களில் நடிக்க வேண்டுமென்ற ஆர்வத்தில் உள்ளார். ஏற்கனவே, பாப்கார்ன் மற்றும் உன்னைப்போல் ஒருவன் படங்களில் நடித்தவர், விஜய் நடிக்கும் படமொன்றிலும், நடிக்க இருக்கிறார்.



◗ சிம்புவின், வாலு படத்தில், ரீ-என்ட்ரி ஆகியுள்ள முன்னாள் ஹீரோயின் மந்த்ரா, ஒன்பதுல குரு படத்தில், வில்லி வேடத்தில் நடிக்கிறார். அதிரடியான வில்லி வேடம் என்றாலும், கிளைமாக்சில் உருக்கமான நடிப்பையும் வெளிப்படுத்தும் மந்த்ரா. இதைத் தொடர்ந்து, முழுநேர குணச்சித்திர நடிகையாக உருவெடுக்கப் போவதாக கூறுகிறார். அதனால், "அம்மா வேடம் தவிர, எந்த மாதிரி வித்தியாசமான கேரக்டர்களிலும் நடிப்பேன்..." என்றும் கூறி வருகிறார்.

---

# நாடு கடந்த அரசின் கறவைமாடு ஊழல்!

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் எனத் தம்மை அழைத்துக் கொள்பவர்கள் இப்போது பல குழுக்களாகப் பிளவுபட்டுள்ளனர். இந்த குழுக்கள் தமக்குள் அடிபட்டதில் நா.க.த பற்றிய பல நகைப்புக்கிடமான தகவல்கள் வெளியாகியுள்ளது. நா.க.தவின் லண்டன் குழு ஆரம்பம் முதலே பல உட் குழுக்களின் அடிபாடு களம் கண்டது. ஆனால் அண்மையில் ஒரு விசித்திரமான ஒரு முரண்பாட்டால் அதில் இன்னுமொரு பிரிவும் உருவாகியுள்ளது. அதன் இந்த பிளவிற்குமான முக்கிய காரணம் கறவைமாடு கேற் (ஊழல்)! உங்களில் பலருக்கு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி நிக்சனின் சரிவிற்கு காரணமாக இருந்த வோட்டர் கேற் ஞாபகம் இருக்கலாம்! ஆனால் நா.க.தவின் இந்த கறவைமாடு ஊழல் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி நிக்சனின் வோட்டர் கேட்டையே ஓரங்கட்டி விட்டது.

நா.க.தவினர் வெறும் பேச்சு வீரர்கள். இதுவரை முன்னாள் போராளிகள் குடும்பத்திற்கோ அல்லது மாவீரர் குடும்பங்களுக்கோ குறைந்த பட்சம் ஒரு தும்புத்தடி கூட வாங்கி கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு இவர்கள் மீது தொடர்ந்து சுமத்தப்பட்டு வந்தது. தாங்கள் ஏதாவது செய்து அந்த குற்றச்சாட்டுக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என நா.க.தவின் லண்டன் குழுவுக்குள் உள்ள ஒரு குழு முடிவு செய்தது. மிக நீண்ட ஸ்கைப் தொலைபேசி கருத்தரங்குகள் மற்றும் நா.க.த மந்திரிமார்களின் பல்வேறுபட்ட மந்திராலோசனையின் பின் வன்னியில் உதவி தேவைப்படும் போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்களுக்கு தலா ஒரு கறவை மாடு வாங்கி கொடுப்பது என முடிவெடுக்கப்பட்டது.

நா.க.த பிரதமர் உருத்திரகுமாரன் இதை மிக அவதானமாக பரிசீலித்து விட்டு கறவை மாட்டு திட்டத்திற்கு பச்சைக் கொடியும் காட்டினார். உடன் இதற்கு பத்தாயிரம் பவுண் காசை ஒதுக்கினர். பெண்கள் சம்பந்தமான பெண்மணி அமைச்சருக்கு கறவை மாடு திட்ட பணி ஒதுக்கப்பட்டது. இந்த அமைச்சரின் கணவர் ஏற்கனவே பிரபலமானவர். லண்டன் வடக்கு பகுதியில் முக்கியமாக ஹரோ பகுதியில் புலிகளுக்கு நிதி திரட்டியவர். இறுதி யுத்தத்தில் வணங்கா மண்ணிற்கும் பணம் சேர்த்தவர். இவர் கறவை மாடு என்றால் மட்டும் சும்மா விடுவாரா தானும் அதிலை கொஞ்சம் கறப்பம் என்று களத்தில் இறங்கி கறவை மாட்டு திட்டத்திற்கு நிதி சேகரிக்க ஆரம்பித்தார்.

சில மாதங்களின் பின் நிதியமைச்சர் பத்தாயிரம் பவுண்களை பெண்கள் அமைச்சருக்கு கொடுத்து கறவை மாடு வாங்க சொல்லியதாகவும் அதனை அடுத்து அம்மணியும் கறவை மாடுகள் வாங்கி கொடுத்து விட்டதாகவும் ஸ்கைப்பில் நடைபெற்ற கறவை மாட்டு திட்ட அமுலாக்க நிகழ்வில் அனைவருக்கும் அறிவிக்கப்பட்டது. இது போராளி குடும்பத்திற்கு பண வருவாய் கொடுப்பதுடன் வன்னி மக்களின் பால் தேவையையும் பூர்த்தி செய்யும் என்று "பவர் பொயின்ற் பிறசன்ரேசனும்" வீடியோ படமும் ஸ்கைப் ஊடாக காட்டப்பட்டது. பிரதமர் உருத்திராவும் இதை வெகுவாக பாராட்டியதுடன் தமிழீழம் கிடைத்ததும் பாலுக்கு குறையிருக்காது பால் ஏற்றுமதியால் தமிழீழம் தன்னிறைவு பெற்று விடும் என அனைவரையும் பாராட்டி ஒரு ஸ்கைப் அறிக்கையை விட்டார்.

இது நடந்து சில நாட்களின் பின் கணக்கு வழக்கு அதாவது நா.க.தவின் பட்ஜெட் கூட்டம் நடைபெற்றது. அதில் இந்த கறவை மாடு பற்றிய வரவு செலவு கணக்கை காணவில்லை. இது சம்பந்தமாக சில உறுப்பினர்கள் கேள்வி கேட்க அது இயக்க ரகசியம். பொட்டம்மான் வந்து கேட்டால் ஒழிய யாருக்கும் கணக்கு தர முடியாது என நிதியமைச்சரும் பெண்கள் அமைச்சரும் அடித்து கூறிவிட்டார்கள். வாங்கிக் கொடுத்தது கறவை மாடா அல்லது நலமடித்த நாம்பன் மாடா என்ற தகவல் கூட தெரியவில்லை. பாதுகாப்பு காரணங்களுக்காக கணக்கு பதியவில்லை என்றும் இலங்கை புலனாய்வுத் துறை கறவை மாடுகளை மணந்து பிடித்து வெள்ளை வானில் கடத்தி விடுவார்கள் அதனால் பயனாளிகளுக்கு மட்டுமல்ல தாம் வாங்கி கொடுத்த கறவை மாடுகளுக்கும் உயிர் ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளதாக இரு அமைச்சர்களும் வாதாடியுள்ளனர். நீங்கள் என்ன கறவை மாடு வாங்கி கொடுத்தீர்களா



அல்லது கண்ணிவெடி மாடு வாங்கி கொர்டுத்தீர்களா என ஆத்திரத்தில் சில உறுப்பினர்கள் கேட்க இயக்க ரகசியம் சொல்ல முடியாது என சிம்பிளாக தட்டிக்கழிக்கப்பட்டது. வாங்கிக் கொடுத்தது கறவை மாடு தானே இதனால் இலங்கை பாதுகாப்புக்கு என்ன பிரச்சினை வந்துவிடும்? என்ற கேள்விக்கு அமைச்சர்கள் அது மிகத்துல்லியமான நா.க.த அரசின் கறவை மாட்டு பாதுகாப்பு தகவல் அதை நாம் இங்கு கூற முடியாது என மறுத்து விட்டனர்.

கேள்வி கேட்டவர்கள் நா.க.தவின் செயலாளரிடம் நிதி அமைச்சர் வங்கி கணக்கில் இருந்து என்ன பெயரில் கறவை மாட்டு பத்தாயிரம் பவுண்கள் பதியப்பட்டுள்ளது என வினவிய போது. அப்படி ஒரு பரிமாற்றமே வங்கி கணக்கில் இருந்து நடைபெறவில்லை என பதில் கூறப்பட்டது. சரி கறவை மாடுகள் ஆகாயத்தில் இருந்து வந்ததாகவே இருக்கட்டும் கறவை மாடுகள் எவ்வளவு பால் கறக்கிறது என்று அறிய, கறவை மாடு பயனாளிகளிடம் விசாரித்த போது அவர்கள் ஆச்சரியத்துடன் கறவை மாடுகளா? எங்களுக்கு கட்டாக்காலி மாடுகளை அல்லவா கொண்டு வந்து தந்தார்கள் என்று புலம்பியுள்ளனர். அதிலும் ஒரு குடும்பத்திற்கு கொடுத்த மாட்டின் முன்கால்கள் சவண்டு நிற்க பின்னங்கால் இரண்டும் மட்டுமே வலுவானதாம். அத்துடன் அந்த மாட்டுக்கு மடியில் 3 முலைக்காம்புகள் மட்டுமே உள்ளதாம். பால் கறக்க மடியிலை கைவைத்தால் குங்பூ ஸ்ரைலிலை அது பின்னங் காலாலை அடிக்குதாம். தங்கடை குடும்பத்தையே பார்க்க கஷ்டமான நிலையில் ஒரு பிரயோசனமும் இல்லாத கட்டாக்காலி மாட்டை பாக்கிற செலவு வேறு என்று ஆத்திரத்தில் அவர்கள் ஒப்பாரி வைத்துள்ளனர்.

இதுதான் நா.க.தவின் கறவை-மாடு கேற் விவகாரம். இந்த "கறவை மாடு கேற்" பற்றி கேள்வி கேட்ட ஒரு பகுதியினர் தற்போது நா.க.தவில் இருந்து லேட்டஸ்ற்றாக ஓரம் கட்டப்பட்டார்கள். இந்த ஓரங்கட்டப்பட்ட குழுவும் லண்டன் பாராளுமன்ற அமர்வு நடைபெறுவதை தடுக்க தம்மால் ஆன பல பங்களிப்பை செய்தார்கள்.

**- அருளம்பலம் கட்டுரையிலிருந்து-**

# பேய்களை நம்பாதே!

- மூதூர் மொகமட் ரபி

பேய்களுக்குப் பயப்படாதவர்கள் என்று இந்த உலகில் யாராவது உண்டா? ஏன் நான் இருக்கிறேனே என்று உங்களில் பலர் துள்ளியெழுவது புரிகிறது. ஆனால் நீங்களும் உங்கள் வயதின் எந்தக் கட்டத்திலாவது பேய்களுக்குப் பயந்துதானே இருப்பீர்கள்? ஆம் என்பதுதான் உண்மை. இல்லை என்று உங்களால் கூறவே முடியாது.

சிலருக்கு பேய்கள் பற்றிய சிறுவயதுப் பயமெல்லாம் தற்காலிகமாக நீங்கியிருக்கும். சிலருக்கு வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து வரும். பலருக்கு பேய்களைப் பற்றி நினைக்கவே நேரமில்லை. ஆனால் எங்காவது தனியாக இருளில் ஆளில்லா சூழ்நிலையில் மாட்டிக் கொள்ளும் போது உடனடியாகத் துணைக்கு ஓடிவருவது நமது மூளையின் சிந்தனை மையத்தின் சேமிப்பிலிருக்கும் பேய்கள் பற்றிய எண்ணங்கள்தான். விரல் விட்டு எண்ணக்கூடிய வெகு சிலபேர்தான் பேய்களைப் பற்றிச் சிறிதும் அலட்டிக்கொள்ளாமல் இருப்பார்கள். அவர்களைப் பற்றி பிறகு சாவகாசமாகப் பார்க்கலாம்.

இப்போது பயப்படுபவர்கள்-

உங்களுக்குத் தெரியுமா பேய்களுக்குப் பயப்படுபவர்களைவிட தாங்கள் பயப்படுவதைக் காட்டிக்கொள்ளாமல் நடிப்பவர்கள்தான் அதிகம். ஒரு நம்பகமான புள்ளிவிபரம் இதைக் கூறுகின்றது. சரி, புள்ளிவிபரம் இருக்கட்டும் ஒருபக்கம். நாம் இந்தப் பேய்கள் எப்படி உருவாயின அல்லது உருவாக்கப்பட்டன என்றும் ஏன் இந்தப் பேய்கள் பற்றிய பயம் மட்டும் கடைசிவரை எல்லோரையும் இப்படிப் பிடித்தாட்டுகின்றது என்றும் சிறிது அலசுவோம்.

சிறுவயதிலே உங்கள் அம்மா அல்லது பாட்டி, பாட்டாக்கள் கதைகள் சொல்லி உணவு ஊட்டியிருப்பார்கள் அல்லது தூங்க வைத்திருப்பார்கள். கொஞ்சம் முரண்டு பிடிக்கும் போதெல்லாம் உங்களை மிரட்டி வழிக்குக் கொண்டுவர தங்களுக்குத் தெரிந்த பல வித்தைகளை அவர்கள் முயன்றிருப்பார்கள். அவற்றிலே சுலபமானதும் உடனடிப் பலன் தருவதுமான வித்தை பேய்கள் பற்றிய கதைகளும் பயமுறுத்தல்களும்தான் போலிருக்கின்றது.

தொட்டிலில் ஆட்டிக்கொண்டே தாலாட்டுப் பாடும் தாய் அடங்காமல் அழும் தன் குழந்தைக்கு, 'அந்தா பேய் வருது-உன்னைப் பார்த்து பல்லைக் காட்டுது' பேசாமல் தூங்கு!' என்று மிரட்டுவதோடு தானும் பயந்தது போல பாசாங்கு செய்வாள். இந்த நிகழ்ச்சி அந்தத் தாயைப் பொறுத்தவரையில் தனது குழந்தையைத் தூங் கச் செய்யும் வெகு சாதாரண உத்தி அல்லது சிறு ஏமாற்று அவ்வளவுதான். ஆனால் அந்தச் சிறுகுழந்தைக்கோ அதன் மனவளர்ச்சி யையும் எதிர்கால ஆளுமையையும் பாதிக் கப்போகும் ஒரு முக்கியமான கல்வெட்டுச் செதுக்கல்!

ஆம், ஒரு குழந்தைக்கு தனது தாயின் வார்த்தைகளின் அர்த்தம் முழுமையாகப் புரியாது போகலாம். ஆனால் அவளது ஒவ்வொரு சிறு அசைவும்கூட உடல் மொழிக்குரிய உணர்வுகளாக அந்தக் குழந்தையினால் மிகவும் கவனமாக உள்வாங்கப்படுகின்றது. ஒரு பூனையையோ நாயையோ குழந்தைக்குக் காண்பித்து அந்தத் தாய் பயமுறுத்துவாளாக இருந்தால் அந்தப் பயத்தின் எல்லை மிகவும் குறுகியதாகவே இருக்கும். குழந்தை சிறிது பெரியவானகியதும் 'ஓ! நாயும் பூனையும் இவ்வளவுதானா?' என்று தெரிந்து பயம் துறந்து விடுவான். மாறாக, இல் லாத ஒன்றை இருப்பதாகக் கற்பித்து அவன் பயமுறுத்தப்படுவதால் வாழ்க்கை முழுவதும் காணமுடியாத ஏதோ ஒன்றுக்கு பயந்தபடி யேதான் இருக்கப்போகின்றான்.

இந்த எண்ணப்பாங்கு அவனது வாழ்வின் இளமைப்பருவத்திலே சிலையில் எழுத்தாகப் பதிந்து விடுவதால், பின்பு எவ்வளவுதான் அறிவியல் தாக்கங்களுக்கு தன்னை உட்படுத்திக் கொண்டாலும் மூளையின் எங்கோ ஒரு ஆழமான புள்ளியில் 'அந்தப் பயம்' மட்டும் இருந்து கொண்டேதான் இருக்கும். இதனால்தான் அறிவியல் ரீதியாக அமானுஷ்ய சக்திகளுக்கு வாய்ப்பில்லையென்று நன்கறிந்த விஞ்ஞானிகளுக்குக்கூட லேசான பேய்ப்பயம் இருக்கின்றது.

அடுத்து-

ஆதிகால மக்களிடம் பேய்கள் பற்றிய பயம் எவ்வாறு ஏற்பட்டிருக்க முடியும் என்று சற்றுப் பார்ப்போம். வேட்டையாடி நாடோடியாக வாழ்ந்த காலத்தில் மழை, இடி, மின்னல், புயல், நிலநடுக்கம், கடல்கோள், கானல்நீர், வானவில், ஆலங்கட்டி மழை, காட்டுத்தீ, கிரகணங்கள், வால் நட்சத்திரங்கள், தொற்றுநோய்கள் போன்ற இயற்கையின் நிகழ்வுகளுக்குரிய சரியான விளக்கம் மனிதனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இதனால் காடுமேடுகளில் அலைந்து திரிந்தபோது அவன் கண்ணுற்ற இயற்கையின் பல நிகழ்வுகளுக்கு தான் அறிந்திராத சில சக்திகள்தான் காரணமாக இருக்க வேண்டும் என்று கருதினான். அவற்றில் தனக்கு உவப்பான இயற்கை நிகழ்வுகளுக்கு நல்ல சக்திகளும் அழிவு அல்லது அச்சம் தரும் நிகழ்வுகளுக்கு தீய சக்திகளும் காரணம் என அவன் எண்ணியதில் வியப்பேதுமில்லைதானே. பின்பு அவற்றுக்கு முறையே கடவுள்கள் என்றும் பேய்கள் என்றும் பெயரிட்டிருப்பான்.

ஆரம்பத்தில் எளிமையாக இருந்த மனிதனின் வாழ்க்கை காலப்போக்கில் படிப்படியாக சிக்கலடைந்தது. மனிதனின் அறிவியல் வளர்ச்சியும் வாழ்க்கைத்தரமும் துரிதமாக வளர்ந்த போது ஆதியில் அவனை மிரட்சிக்குள்ளாக்கிய பல இயற்கையின் விளைவுகளுக்குரிய காரணங்களை கண்டறிந்து தெளிவடைந்தான். எனினும் மனித வாழ்வின் சமூக அமைப்புகளிலும் அதன் போக்கினில் ஏற்பட்ட சிக்கலான மாற்றங்களின் காரணமாக அறிவியல் உண்மைகளை ஏற்றுக் கொள்வதிலும் அதுபற்றிய கருத்தாக்கங்களிலும் வேறுபாடுகள் உண்டாயின.

இதை இன்னும் விளக்கமாகக் கூறுவதானால் காட்டு விலங்குகளில் ஒன்றாக வாழ்ந்திருந்த மனிதன் படிப்படியாக நாகரிகமடைந்து தனது சூழலையும் அவற்றில் நிகழும் மாற்றங்களையும் அவதானித்து ஆய்வுகள் பல புரிய ஆரம்பித்தவுடன் இயற்கையின் மாயத்திரைகள் பல விலகத் தொடங்கின. அவற்றின் விளைவாக பல உண்மைகள் வெட்ட வெளிச்சமாகின.


> “எங்காவது தனியாக இருளில் ஆளில்லா சூழ்நிலையில் மாட்டிக் கொள்ளும் போது உடனடியாகத் துணைக்கு ஓடிவருவது நமது மூளையின் சிந்தனை மையத்தின் சேமிப்பிலிருக்கும் பேய்கள் பற்றிய எண்ணங்கள்தான். விரல் விட்டு எண்ணக்கூடிய வெகு சிலபேர்தான் பேய்களைப் பற்றிச் சிறிதும் அலட்டிக்கொள்ளாமல் இருப்பார்கள். உங்களுக்குத் தெரியுமா பேய்களுக்குப் பயப்படுபவர்களைவிட தாங்கள் பயப்படுவதைக் காட்டிக்கொள்ளாமல் நடிப்பவர்கள்தான் அதிகம்.”

ஆரம்பத்தில் மனிதனால் கண்டறியப்பட்ட சகல உண்மைகளுக்கும் மதிப்பளிக்கபபட்டு வந்தது. ஆனால், காலப்போக்கிலே அங்ஙனம் அவன் கண்டறிந்த அறிவியல் உண்மைகள் பலவற்றை - அவை எவ்வளவுதான் ஐயம் திரிபற உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கூட - ஏற்றுக் கொள்ள முடியாதளவு மனிதனே உருவாக்கி வளர்த்த சில நம்பிக்கைகளும் சித்தாந்தங்களும் மக்களைத் தடுத்து வைத்தன. உதாரணமாக ஒருகாலத்தில் நாம் வாழும் பூமியே இந்தப் பிரபஞ்சத்தின் மையமாகக் கருதப்பட்டது. சகல கோள்களும் சூரியனும் நமது பூமியையே சுற்றி வருவதாகக் கருதப்பட்டு வந்தது. இந்தக் கருத்தை ஏற்றுப் பல மத நம்பிக்கைகளும் சித்தாந்தங்களும் உருவாகி வலுப்பட்டிருந்தபோது 'பூமியல்ல சூரியன்தான் ஞாயிற்றுத் தொகுதியின் மையம்' என்பதை அறிஞர்கள் பலர் ஆய்வுகளின் மூலம் கண்டறிந்தார்கள். ஆனால் இந்தப் புதிய கண்டுபிடிப்பை அன்றைய செல்வாக்கிலுள்ள மத நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அத்துடன் அத்தகைய புதிய உண்மைகளை ஆய்ந்தறிந்து கூறும் அறிவியலாளர்களுக்கு மரணதண்டனை உட்பட பல தண்டனைகளையும் வழங்கியது.

இது போலத்தான் அமானுஷ்ய சக்திகள் பற்றிய பயமும் நம்பிக்கைகளும். இத்தகைய நம்பிக்கைகள் அறிவியலாளர்களால் நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும்கூட அவற்றை வைத்துக் காசு பார்க்கும் அல்லது தங்களது ஆதிக்க அடக்குமுறை நலன்களுக்குப் பயன்படுத்தி வருகின்ற ஒரு சாரார் விடுவதாக இல்லை.

மின்சார வசதிகள் இல்லாத மன்னர்களின் ஆட்சிமுறை இருந்த நாள்களில் திருடர்களும் வழிப்பறிக் கொள்ளையர்களும் ஓர் உத்தியைக் கையாள்வதுண்டு. நீண்ட காலமாக திருடிச் சேர்த்த சொத்துகளை எங்காவது பாழடைந்த வீடுகளிலும் கட்டடங்களிலும் பதுக்கி வைத்திருப்பர். இதனால் குறிப்பிட்ட அந்தப் பிரதேசத்திலே மக்கள் சுதந்திரமாக உலாவுவதை அவர்கள் விரும்புவதில்லை. இதற்காக அந்தத் திருடர்கள் பகலிலே நன்றாகத் தூங்கி பின்னிரவில் எழுந்து கறுப்புப் போர்வையால் தங்களை மூடிக் கொண்டு அந்தக் கட்டடங்களைச் சுற்றிலும் அவலக் குரல் எழுப்பியபடி உலாவுவார்கள். அப்படிச் செய்வதனால் பேய்களின் நடமாட்டம் இருப் பதாக ஊருக்குள் கதை பரவும். அதனால் அந்தப் பகுதிக்கு பகலிலும் கூட பொது மக்கள் வரத்துணிய மாட்டார்கள். இதனால் பதுக்கிய பொருளும் திருட்டு பற்றிய இரகசியமும் பிறருக்குத் தெரியாமல் பாது காப்பாக இருக்கும் என்பதுதான் அவர்களது பயமுறுத்தலின் பின்னாலுள்ள செய்தி.

திருடர்களுக்கு தமது திருட்டுச் சொத்துகளைப் பாதுகாக்க பேய்கள் எனும் கருத்தாக்கம் எவ்வாறு பயன்படுகின்றதோ அவ்வாறுதான் நமது சமூகத்தில் வாழும் மக்களின் விழிப்புணர்ச்சியை மழுப்புவதற்கு பல மூடநம்பிக்கைகள் உதவுகின்றன. சூனியம், பேய், பிசாசு, ஆவிகளிடம் பேசுவது, மந்திர தந்திரங்களால் நோய்களைக் குணப்படுத்த நினைப்பது, சாமியார்களிடம் நம்பிக்கை வைத்து ஏமாறுவது போன்ற விடயங்களின் பின்னால் இருப்பதெல்லாம் வெறும் ஏமாற்றுப் பித்தலாட்டங்களன்றி வேறு எதுவும் கிடையாது.



# மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டால்

# உவராக மாறும் நிலத்தடி நீர்



தொண்டைமானாறுகடல் நீரேரியில் நீர்ப்பாசனத்திணைக் களத்தினால் அமைக்கப்பட்டுள்ள நன்னீர் தடுப்பணைக்கருகில் அத்து மீறி சில மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் நிலத்தடி நீர் நிலைகள் சவர் நீராக மாறி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் பெய்த அடைமழையினால் இரணைமடுக் குளத்திலிருந்து மருதங்கேணி வாய்க்கால் வழியாக மழை நீர் தொண்டைமானாற்றுக்கு வருகின்றது. இவ் ஆற்றில் இறால் இன மீன்கள் பெருகிவரும் நிலையிலும் குறித்த பகுதி மீனவர்கள் சிலர் பெருளமவான இறால் இனங்களை பிடித்து தென்னிலங்கையினர்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர். இவ்வாறான ஒரு நிலையில சிறுதொழில் மீனவர்களான குறித்தபகுதி மீனவர்கள் தடுப்பணையில் இருந்து 100மீற்றர் தூரத்திற்கு அப்பால் சென்று இறால் பிடிக்க நீர்ப்பாசனத்திணைக்களம் அனுமதி வழங்கிய போதிலும் 50 மீற்றர் தூரத்தில் இருந்து இறால் மீனினங்களை இரவு பகலாக பிடித்து வருகின்றனர்.

இதனால் மீனினங்களின் இருப்பிடமான கற்கள் கிளம்பி வான் கதவுகளுடன் மோதுகின்றன.

இதனால் பெரும் மழை காலத்தில் வான் கதவுகளை பூட்டித்திறக்க முடியாதுள்ளதாக நீர்ப்பாசன திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இம் மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டைக் கருத்தில் கொண்டு இரவு பகல் காவலாளி ஒருவரை நியமித்துள்ளதுடன் அவரிடமும் சில மீனவர்கள் முரண்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான மீனவர்களின் செயற்பாட்டினால் மறுபடியும் உப்பு நீர் மழை நீரிருடன் கலக்கப்பட்டு நீலத்தடி நீர் நிலைகள் உவர் நீராக மாற்றம் பெற்று வருகின்றது எனவும் இதனால் இடைக்காடு அச்சு வேலி, புத்தூர், கோப்பாய், வடமராட்சி கெருடாவில், உடுப்பிட்டி, கட்டைவேலி, கரவெட்டி, கரணவாய் போன்ற பகுதி விவசாய நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறு தொழில் மீனவர்கள் நலன்கருதி ஜப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இறால் குஞ்சுகள் தொண்டைமானாறு பகுதியில் விடுவதற்கு நீர்ப்பாசன திணைக்களம் தீர்மானித்துள்ளதாகவும் இதன் பரீட்சார்த்தமாக சுண்டிக்குளம் ஆற்றில் ஜப்பான் நாட்டு இறால் குஞ்சுகள் விடப்பட்டு வளர்க்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (116)

# வன்முறைகளை வெளியிடுவதில் 75 வீதமானோர் தயக்கம்

## - தேவை நாடும் மகளிர் நிறுவனத்தின் இணைப்பாளர்

(யாழ்ப்பாணம்)



குடும்பவன்முறை என்பது தனியே வன்முறையை மட்டும் குறிப்பதில்லை. அதில் குடும்பவன்முறை, பாலியல் வன்பிரயோகம் பாலியல் தொல்லைகள் போன்ற பல்வேறு பிரிவுகள் உண்டு. இவ்வாறு பாதிக்கப்படும் பெண்கள் சிறுவர்களில் நூற்றிற்கு எழுபத்தைந்து வீதமானவர்கள் தமக்கு நிகழும் சம்பவங்களை வெளிக்கொண்டுவருவதில் தயக்கம் காட்டுவதே இன்று எம்முன்உள்ள சவாலாகவுள்ளது என்று இலங்கையில் பெண்கள் சிறுவர்களுக்கு எதிராக இடம் பெறும் சகல விதமான வன்முறைகளுக்கும் எதிராக குரல்கொடுககும் தேவை நாடும் மகளிர் (WIN) நிறுவனத்தின் இணைப்பாளர்ஆரணி பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். ரில்கோ விடுதியில் நடைபெற்ற பாலியல் சமத்துவம் தொடர்பான கருத்தரங்கு மற்றும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்: யாழ்ப்பாணத்தில் 2004ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வரும் தமது அமைப்பு யாழ். மாவட்டத்தில் ஆறு பிரதேச செயலர் பிரிவுகளில் செயலாற்றி வருவதாகவும், எதிர்காலத்தில் வன்னிப்பகுதியிலும் வன்முறைகளுக்குள்ளாக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்தார். அத்துடன் தமது அமைப்புக்குக் கிடைக்கும் நிதி மற்றும் வசதிகளைக் கொண்டே தாம் சேவையாற்ற வேண்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை 8.30 மணி முதல் 1.30 மணிவரை நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் பெண்கள் மற்றும் சிறுவர் வன்முறை குறித்த கலந்துரையாடலும் இடம் பெற்றது. அத்துடன் இது சம்பந்தமாக எதிர்காலத்தில் விழிப்புணர்வு நடவடிக்கையும் கருத்தரங்கும் நடாத்தவேண்டியதின் தேவையும் இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. (பா, 02)

# கடல் கடந்த வீரர்களுக்கு பாராட்டு விழா

(வடமராட்சி)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சின் அனுசரணையுடன் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நாடு முழுவதும் நடாததிவரும் கடல் .கடந்த வீரர்களின் பத்து நாள் பாராட்டு விழாவின் வடமாகாண விழா கிளிநொச்சி கூட்டுறவுச் .சபை மண்டபத்தில் இலங்கை வேலைவாய்ப்புப் பணியக பிரதி முகாமையாளர் எஸ். சுரேஸ்குமார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இவ்விழாவிலே வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ். சோமசுந்தரம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீல்தளுவத்தை இராணுவக் கட்டளைத்தளபதி கேணல் எஸ். எஸ். நாணயக்கார, வைத்திய கலாநிதி எஸ். சுபேந்திரன், தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபை உத்தியோகத்தர் எஸ். வினோதராஜ் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர்.

யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மன்னார், வவுனியாமாவட்டங்களிலிருந்து கடல் கடந்த வீரர்களின் குடும்பத்தினர் உறவினர்கள், கடல் கடந்த வீரர்கள் இவ்விழாவிலே கலந்து கொண்டனர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களும் இங்கு சமுகமளித்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் வசதிகள் பற்றி விளக்கமளித்தனர். இங்கு வருகை தந்திருந்த கடல் கடந்த வீரர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (01)

# ஆயுர்வேதம்



## தசைநார்களை வலுப்படுத்த...

உடலின் மூட்டுகளில் சிறு அடிபட்டாலோ அல்லது வேகமான அசைவுகளாலோ LIGAMENT TEAR OR STRAIN அதாவது தசைநார் கிழிதல் எனும் பிரச்சினை உண்டாகலாம். அதனால் மடக்கவோ நீட்டவோ முடியாமல் போகும். தசை நார்களை வலுப்படுத்தும் நெய்ப்பு, கனம், வழுவழுப்பு, இறுக்கம் போன்ற குணங்களைக் கொண்ட உணவு வகைகள் சரிவர செரிமானமாகாமல் வெளியேறினால், இந்த தசை நார் கிழிதல் எனும் உபாதை ஏற்படலாம்.

இவற்றை நன்றாக வயிற்றில் செரிக்க வைத்து உடல் உட்புறப் பகுதிகளில் சேர்க்கும் திறன் கொண்ட அமிலச் சுரப்பும், பசியும் ஏற்படும் வகையில் உணவை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். கறிவேப்பிலைத் துவையலை சூடான சோற்றுடன் கலந்து, சிறிது நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து, நெல்லிக்காய்த் தயிர்ப் பச்சடியில் தோய்த்து காலை உணவாகச் சாப்பிட்டால், வயிற்றிலுள்ள கதகதப்பை நாம் நிரந்தரமாகச் சம்பாதித்துக் கொள்ளலாம். அமிலச் சுரப்பையும், பசியையும் நன்றாகத் தூண்டிவிடும் சித்ரான்னம் எனப்படும் ஜாதி நார்த்தை, கிச்சிலி நார்த்தை, துறிஞ்சி, கிடாரங்காய், கொளிஞ்சிக்காய் போன்றவற்றில் ஏதேனும் ஒன்றின் சாற்றுடன் சோற்றைப் பிசைந்து காலை உணவாகச் சாப்பிட்டால், அதிலுள்ள தனிப் புளிப்பும், கசப்பும் கலந்த புளிப்பும் மேல் வயிற்றில் உள்ள ஜீரண கோசத்தையும், நாவிலுள்ள ருசி கோளங்களையும் சுறுசுறுப்படையச் செய்து சீக்கிரம் உணவைச் செரிக்க உதவுகிறது. கல்லீரலும் சுறுசுறுப்படைந்து ஜீரணத்தைத் தொடர்ந்து சத்து உடலில் சேருமளவு பணியாற்றுகிறது.

இப்படியாக உணவுப் பாதை நெடுக, வழி சுத்தமாகி, முன் குறிப்பிட்ட குணங்களை வரவேற்று, தன்னை வளர்த்துக் கொள்ளும் வகையில் தசை நார்கள் வலுப்பெற்றுவிடும். அடிபட்டாலோ, வேகமான அசைவுகளாலோ ஏற்படும் சத்துச் செலவை, இந்த குணங்களின் வாயிலாகச் செலவிடும்போது, தசை நார்களின் தேய்மானத்தைத் தடுத்துவிடலாம். எதையும் தன்னகத்தே சேர்த்துக் கொள்ளும் வகையில் தசை நார்களின் செயல்திறன் வளர்ந்துவிட்டால், உடல் வெளிப்புற சிகிச்சைகளின் மூலம் அவற்றை மேலும் வலுப்படுத்தலாம்.

மஷாமாஷ தைலம், பலாஅஸ்வகந்தாதி குழம்பு, வாதமர்த்தனம் குழம்பு போன்றவற்றில் ஒன்றிரண்டைக் கலந்து வெதுவெதுப்பாக தசைநார்ப் பகுதிகளில் துணியால் முக்கி கட்டி வைத்திருந்து அரை, முக்கால் மணி நேரம் கழித்து கட்டவிழ்த்து, துணியால் துடைத்துவிடும் சிகிச்சையும் நல்லதே. குடிப்பதற்கும், குளிப்பதற்கும் வெதுவெதுப்பான தண்ணீரையே பயன்படுத்த வேண்டும்.

செரிமானம் நன்றாக ஏற்படும் வகையில் அமைந்துவிட்டால், உணவில் காரம், துவர்ப்பு, கசப்புச் சுவை ஆகியவற்றைக் குறைத்து இனிப்பு, புளிப்பு, உப்புச் சுவையுள்ளவற்றைச் சற்றுக் கூட்டிக் கொள்ளவும். பால், நெய், தயிர், வெண்ணெய், இனிப்பு மாதுளை, வாழைப்பழம், திராட்சை, அரிசி, கோதுமை, உளுந்து இவை உணவுக்கு ஏற்றவை. அதிக உடற்பயிற்சி செய்வதையும், இரவில் கண் விழிப்பதையும் தவிர்க்கவும்.

மேற்குறிப்பிட்ட உணவும், சிகிச்சை முறையும் தசைநார் கிழிதல் பிரச்சினைக்கு நிச்சயம் உதவிடும். ஆனால் அதுவே பூரண சிகிச்சையாக தீர்மானிக்க முடியாது. தைலதாரா எனும் உடல் முழுவதும் ஊற்றப்படும் வெதுவெதுப்பான மூலிகைத் தைல முறையும், தசை நார்களை வலுப்படுத்தும் நவரக் கிழி எனும் தேய்ப்பு முறையும் மிகவும் உபயோககரமான சிகிச்சைகளாகும். ஆயுர்வேத மருத்துவமனைகளில் இவை சிறப்பாக செய்யப்படுகின்றன. ப்ருகத்சாகலாதி கிருதம் எனும் ஆயுர்வேத மூலிகை மருந்தைக் காலை, மாலை வெறும் வயிற்றில் சுமார் 10 - 15 மில்லி லீற்றர், தொடர்ந்து 48 நாட்களுக்குச் சாப்பிட்டு வரவேண்டும்.

# வர்த்தக நிலையங்களின் உரிமைமாற்றங்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்

(யாழ்ப்பாணம்)

நிரந்தர வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக நடைபாதை வியாபாரம் முற்றாகத் தடை செய்யப்பட வேண்டுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் யாழ்.வர்த்தக சமூகத்தினருடனான உரிமை மாற்றம் தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாநகர சபையின் சுற்றறிக்கையின் பிரகாரம் வர்த்தக நிலையங்களின் உரிமை மாற்றத்தை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுமென்றும் அதனை எவ்வாறு சட்டமாக்குவது என்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்த அமைச்சர் அவர்கள் நிரந்தர உரிமை தொடர்பில் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுவது முக்கியமென்றும் சுட்டிக்காட்டினார்.



அத்துடன் 1990 ஆம் ஆண்டு முஸலிம் சகோதர மக்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப் பட்டிருந்த நிலையில் அவர்களது வர்த்தக நிலையங்களை தற்போது யாராவது நடத்தும் பட்சத்தில் அவற்றை மீளஒப்படைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட அமைச்சர் அவர்கள் உரியவர்களின் கடிதம் அல்லது ஆவணங்களின்றி நடாத்துவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படுமென்றும், குறிப்பிட்ட விடயம் தொடர்பில் நேர்மையானதும் நியாயமானதுமான முறையில் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

இதேவேளை, உறவினர்களைத் தவிர வேறுயாருக்காகவது வர்த்தக நிலையங்களை ஒப்படைக்கும் பட்சத்தில் அதற்கு வாடகை பெற்றுக் கொள்ளப்படுமென்றும் அதுவிடயம் தொடர்பில் எதிர்வரும் ஜனவரி மாத இறுதிக்குள் மாநகர சபை ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவித்தார்.

இதனிடையே நடைபாதை வியாபாரிகளின் அத்துமீறிய வியாபார நடவடிக்கைகள் தொடர்பாக வர்த்தகர்களால் பிரஸ்தாபிக்கப்பட்ட போது வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து அவ்வாறான வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் அதேவேளை, வியாபார ஸ்தாபனங்களுக்கு முன்பாக நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர்களினதும், அத்துமீறிய வியாபாரிகளினதும் வியாபார நடவடிக்கைகளுக்கு முற்றாக தடைவிதிக்கப்படுமென்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் நடைமுறையில் உள்ளூர் வர்த்தகர்களின் நலன்களை பாதிக்காத வகையில் முடிவு எட்டப்படவேண்டுமென்பதுடன், வர்த்தகர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் அதேவேளை, மாநகர சபையினது வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் ஒத்துழைப்பும், ஒத்தாசையும் வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இதன்போது வர்த்தகர்களது கருத்துக்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டன.

இக்கலந்துரையாடலில் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, பிரதிமுதல்வர் ரமீஸ், மாநகர ஆணையாளர் பிரணவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வீட்டுச் சூழலில் குப்பை; 359 பேர் செலுத்தினர் தண்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சுற்று சூழலை பாதிப்படையும் விதத்தில் வீட்டுக்கழிவுப் பொருட்களை வைத்திருந்தவர்களை பொலிஸார் சட்டத்தின் முன்நிறுத்திவருகின்றனர்.

ஜனவரி தொடக்கம் ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் வீடுகளில் குப்பைகளை தேக்கிய, தண்ணீர் தாங்கிகள் மற்றும் கிணறுகளை அசுத்தமாக வைத்திருந்தமை, வீட்டின் அருகிலே புல்பூண்டு பற்றைகளை வைத்திருத்தமை ஆகிய குற்றச்சாட்டில் 359 பேர் கைதுசெய்யப்பட்டு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் குற்றப்பணம் செலுத்தியுள்ளனர்.

இதன்போது ஜனவரி மாதம் 35 பேர் கைதுசெய்து 105,000 ரூபாவும், பெப்ரவரி மாதம் 26 பேர் கைது செய்து 78,000 ரூபாவும், மார்ச் மாதம் 39 பேர் கைது செய்து 117,000 ரூபாவும், ஏப்பிரல் மாதம் 28 பேர் கைது செய்து 84,000 ரூபாவும், மே மாதம் 41 பேர் கைது செய்து 1,23000 ரூபாவும், யூன் மாதம் 25 பேர் கைது செய்து 75,000 ரூபாவும்,

யூலை மாதம் 27 பேர் கைது செய்து 81,000 ரூபாவும், ஆகஸ்ட் மாதம் 30 பேர் கைது செய்து 90,000 ரூபாவும், செப்ரெம்பர் மாதம் 21 பேர் கைது செய்து 66,000 ரூபாவும், ஒக்டோபர் மாதம் 87 பேர் கைது செய்து 2,80,000 ரூபாவும், குற்றப்பணமாக செலுத்தியதுடன் மே மாதம் சட்டத்துக்கு முரணான வகையில் சவுக்கு மரம் வெட்டிய குற்றச்சாட்டில் 9 பேர் வரை கைது செய்து 1,21,000 ரூபாவையும் குற்றப்பணமாக செலுத்தியுள்ளனர். (116)

# பரமர் சங்கமம்



'கூரை ஏறிக் கோழி பிடிக்காதவன் வானமேறி சந்திர மண்டலம் போனானாம்' எண்டால் நீங்க நம்புறீங்களோ! அது போலதான் இப்பத்தேப் புதினங்கள் சில. அண்டைக்கு போன 17ஆம் திகதி திங்கக்கிழமை மூண்டு மகா கண்டங்களான பிரசர். கொலஸ்ரோல். டயாப்பிட்டி கிளினிக்குப் போனன். எனக்கும் உந்தக் கோதாரிகள் இருக்கெண்டுதான் நாலு வருசமாக் கொப்பியும். கையுமாத் திரியிறன்.

இல்லையெண்டாலும் ஒவ்வொரு முறையும் முன்னூறு சனங் களுக்குக் குறைவிருக்காது. அண்டைக்கு ஒரு வரிசையில மட்டும் இருபது இருபத்தைஞ்சு சனம் இருந்தது. ஏனிப்பிடி எண்டு யோசிச்சால் வானத்தில் இருந்து கல்லு விழுகிது எண்டால சனம் வரேல்லை எண்டு கதைச்சுதுகள்.

'கல்லு விழுந்து முடியிறதுதானெ எதுக்குப் பிறகு மருந்தும் மாயமுமெண்டு சனம் வராமல் நிண்டுட்டுதாக்கும்' எண்டொருவர் சொன்னார். அதுக்கங்கால இருந்து பிரசர் கூடினா அதுக்குப்பிறகு தான் எங்கட சனம் ஓடித்திரியும். எண்டும் இன்னொருவர் திருவாய் மலர்ந்தருளினார்.

கொப்பியைக் குடுத்திட்டு வைத்தியரிடம் காட்டப் போகேக்க ஆஸ்பத்திரி அட்டன்டன்மார் மூண்டு பேர் மேசை ஒண்டைச் சுத்தி இருந்து கொண்டு கைகளை ஊண்டி தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்தினம்.

அதிலை ஒருவர் என்னைத் தெரிஞ்சவர் பத்திரிகைக்காரன் ஏதும்புதுங்கலாமெண்டு கூப்பிட்டார். போனன் 21ஆம் திகதி உலகம் அழியப் போகுதாம் உண்மையோ எண்டார்.

நான் அதுக்கு என்னத்தைச் சொல்ல எண்டு நிக்க மற்றவர் 'பூமியை விட பெரிய கல்லாம்' எண்டார். இன்னொருவர் சொன்னார். அந்தக் கல்லை இவங்கள் உடைக்கிறாங்களாம். எங்க மூண்டாமவர் அத எப்பிடியும் விழவிடமாட்டாங்கள். அங்கால மெதுவாத்தள்ளிக் கிள்ளி விட்டு பூமியில விழாமல் செய்து போடுவாங்கள் எண்டார்.

இவ்விதம் மூண்டு பேரும் என்னைப்பேசவே விடாமல் மாறி மாறிக் கதைச்சு மனதைத் தேற்றிக் கொண்டார்களோ, என்னவோ!

எனக்கு மூளை வேறை விதமாக வேலை செய்யத் தொடங்கிச்சுது. இந்தப் பூமியையும் விடப்பாரிய கல்லை உடைச்சுப் போடுவாங்கள் எண்டு அவை கதைச்ச கதையைத்தான் என்ரை மூளை சுத்திச்சுத்தி வந்துது.

எங்கட ஆக்கள் உடைக்கிறதிலை கெட்டிக்காரர்கள் தான். ஒற்றுமையா இருக்கிற குடும்பங்களை ரெண்டாக இல்லை நாலைந்தாக் கூட உடைச்சுப் போடுவினம்.

ஒரே இனத்துக்குள் பல்வேறு பிரிவுகள் தோன்ற அந்தக் காலத்தில் இருந்தே ஆதிரி வந்த பணி கொஞ்ச நஞ்சமல்ல. அதோட மக்களாட்சி தொடங்கினாப் பிறகு தேர்தலில் நிக்கிறவை உடைக்கிற விசயங்கள் கனக்க.

போத்தில்களும் உடைப்பினம். தான் வெல்ல வேணுமெண்டா மற்றப் பாட்டீனர் ஆக்களை தோத்தலில் நிக்க வைத்து வோட்டுகளை உடைச்சுத் தாங்க வெல்லப் பாப்பினம்.

பின்னை பூமியை நோக்கிவாற கல்லை கூரை ஏறிக்கோழி பிடிக்க ஏலாதவை சும்மா இருந்து வாயைச் சப்பிறதில்லாமல் நிறுத்தவே போகினம் இல்ல தெரியாமல் கேக்கிறன்...

# கந்தபுராணபடிப்பு

(வடமராட்சி)

அருள் மிகு புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தில் கந்தபுராண படலம் கடந்த 10ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினந்தோறும் கந்தப்புராணப் படிப்பு இடம்பெற்று முருகனுக்கு விசேட பூசைகளும் ஆராதனைகளும் இடம்பெற்று வருகின்றன. (01)

# ஒளிவிழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஒளி விழா நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

நலன்புரிச் சங்கத்தலைவர் திருமதி.ப.ஜெயராணி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் மாவட்டச்செயலக அலுவலர்களது கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளதுடன் சிறுவர்களுக்கு பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (142)

# முரசின் இன்றைய பலன்

(19.12.2012 - புதன்கிழமை)

நந்தன வருஷம் மார்கழி மாதம் 04 ஆம் திகதி. நட்சத்திரம் சதயம். பிறபகல் 1.29 வரை. திதி ஸப்தமி. சித்தாமிர்தம் பின்னிரவு 4.25 வரை. இராகுகாலம் 12.24 - 1.54 வரை. சுபநேரம் 4.54 - 6.24 வரை. இன்று உதயத்தின் முன் திருவெம்பாவை பூஜை ஆரம்பம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம்  | சொந்த தேவை பூர்த்திக்கு பெரிதும் ஆர்வம். முயற்சிக்குரிய பலன் கிடைக்கும். தொழில் திருப்திகரம். ஆதாய பணவரவு. குடும்பத்தில் சுப நிகழ்வு. பெண்களுக்கு கௌரவம். |
| ரிஷபம்  | சாந்த குணத்துக்கு நன்மை பெறுவீர்கள். சமூகத்தில் அந்தஸ்து. தொழில், புதியவர்கள் உதவுவர். பணவரவில் திருப்தி. வீட்டுப்பொருள் வாங்குதல். பிள்ளைகள் அனுசரணை. அமைதி. |
| மிதுனம்  | நீண்ட நாள் ஆசை நிறைவேறும். பெருமை, அந்தஸ்து உயரும். சக ஊழியர்கள் பராட்டுவர். உபரி வருமானம். மாமன், மைத்துனருக்கு உதவி. மாணவர் தேர்ச்சி. புது அனுகூலம். |
| கடகம்  | நீதி, நேர்மைக்கு முக்கியத்துவம். பலரும் அன்பு பாராட்டுவர். தொழில், குளறுபடி சரியாகும். பண வரவும், நன்மையும். கடன் தீரும். மாணவர்க்கு அதிருப்திகள் விலகும். மேன்மை. |
| சிம்மம்  | உதவி பெற்றவர்கள், நன்றி பாராட்டுவர். சொந்தப்பணி நிம்மதி தரும். தொழில், வளர்ச்சி பெற வாய்ப்பு வரும். திருப்தியான இலாபம். இல்லறத்துணை விரும்பியது செய்வீர்கள். |
| கன்னி  | மனதிற்கு இதமான செய்தி வரும். எண்ணங்கள் செயலாகும். உழைப்பிற்கு அங்கீகாரம். வரவு உயரும். சமூகத்தில் கூடுதல் கௌரவம். எதிர்பார்த்த சுப செய்தி வரும். யோகமான நாள். |
| துலாம்  | சிந்தனையில் புதிய மாற்றம். நல்லவர்களின் உதவி கிடைக்கும். தொழில், அபிவிருத்தி. பணவரவு திருப்தி. குடும்பத்தில் ஒற்றுமை. அரச உதவி. தடை தாண்டி முன்னேறும் நாள். |
| விருச்சிகம்  | உறவினர், நண்பர்களின் அதிருப்தி போக்குவீர்கள். தொழில், சிறுஅளவில் கடன் பெறுவீர்கள். கடுமையான உழைப்பு. வெளியூர் பயணத்தில் பயன். உடல் பாதுகாப்பில் கவனம். |
| தனுசு  | மனதில் புதிய ஞானம் பிறக்கும். வேண்டாத பணிகளை சமயோசிதமாக விலக்குவீர்கள். தொழில், இலக்கு நிறைவேறும். அளவான வரவு. பிறருக்கு உதவுவீர்கள். கருணை, இரக்கமும். |
| மகரம்  | மிகுந்த உற்சாகம். பலநாள் நினைத்த காரியம் நிறைவேறும். தொழில், நண்பரால் உதவி. ஆதாய பணவரவு. விருந்து உபசரிப்பு. சலுகைப்பயன் கிடைக்கும். கலைத்துறை ஈடுபாடு. |
| கும்பம்  | சிலரது ஏளனம் சினம் உண்டாக்கும். பொறுமை தேவை. தொழில், குறுக்கீடு வரலாம். மிதமான பணவரவு. சேமிப்பு பயன்படும். ஓய்வு உடல் நலம் காக்கும். வழிபாடு செய்து நிம்மதி. |
| மீனம்  | செயல்களில் தடுமாற்றம். தொழில் சுமார். குறைந்த பணவரவு. முக்கிய பணி நிறைவேற தாமதம். பிறரின் பொறுப்பு ஏற்கவேண்டாம். சிகிச்சை பெறுவீர்கள். தோல்வி நினைத்து கவலை. |

## Answer the questions

What is your father? ..............................

Do you have a sister? ..............................

How old are you ? ..............................

What is your name? ..............................

## Say true of false

1) Traffic lights are an the road ( )


2) Fishes are in the market ( )

3) Sun gives light in night ( )

4) Flowers are ugly in our surrounding ( )

5) Tree can uses for the furniture ( )

## Do the puzzle




தரம் 2-3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2012

# கல்வி முரசு

1 மணி




இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

## Read and match

| | |
|---|---|
| 1) Moter | Soda |
| 2) Drink | Rice and curry |
| 3) Eat | Cycle |
| 4) Three wheeler | Air |
| 5) Aeroplane | Auto |

## Make five words from there letters in family




1) ..............................


2) ..............................

3) ..............................

4) ..............................

5) ..............................

## Fill in the blanks



1) Bala take a ..............................


2) We play ..............................

3) ..............................is going on the road

4) Kamala is eating ..............................

5) Malar is drinking ..............................

**Write the name of the picture**



1) ..........................................

2) ..........................................

3) ..........................................

4) ..........................................

2) ..........................................

**Write in the suitable coloum**

| Furniture | Fruit | Vegetable |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

chair, mango

beans, apple, table,

pumpkin, desk,

grapes,

chilly

**Write about your family in 4 sentence**

1) ..........................................

2) ..........................................

3) ..........................................

4) ..........................................

**Arrange and write**

1) a/ farmer / in / the / field / is ..........................................

2) Teacher / water / is / the/ drinking ..........................................

3) My / driver / is / a / uncle ..........................................

4) Doctor / work / hospital / in / the ..........................................

5) God / I / Pray / all / for ..........................................

**Read and Draw**

1) Three Birds ..........................................


2) Five leaves ..........................................

3) Six Chairs ..........................................

4) Cup and Saucer ..........................................

5) Bucket ..........................................

**Write 5 words in this picture**



1) ..........................................

2) ..........................................

3) ..........................................

4) ..........................................

5) ..........................................

# இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டி; இரத்துச் செய்ய யஷ்வந்த் வலியுறுத்து



இந்தியா - பாகிஸ்தான் இடையே நடக்க உள்ள கிரிக்கெட் போட்டியை இரத்துச் செய்ய வேண்டும் என்று பா.ஜ வலியுறுத்தியுள்ளது. டில்லியில் நேற்று முன்தினம் பா.ஜ மூத்த தலைவர் யஷ்வந்த் சின்கா தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்தியா வந்த பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக், பாபர் மசூதி இடிப்பையும் 2008இல் நடந்த மும்பை தாக்குதலையும் ஒப்பிட்டு பேசியுள்ளார். மேலும் மும்பைத் தாக்குதலில் தொடர்புடைய லஷ்கர் இயக்க தீவிரவாதி அபு ஜிண்டால் இந்திய உளவு நிறுவனங்களின் முகவர் என்றும் அவர் கூறியுள்ளார். இதன் மூலம் இந்தியாவை மாலிக் அவமதித்துள்ளார்.

அவர் இப்படி கூறியுள்ள நிலையில், இந்தியாவும் பாகிஸ்தானும் கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதன் மூலம் நாம் என்ன நல்லெண்ணத்தை உருவாக்க போகிறோம். பாகிஸ்தான் அமைச்சர் இந்தியாவை அவமதித்துள்ள நிலையில், இந்தியா , பாகிஸ்தான் இடையே விரைவில் நடக்க உள்ள கிரிக்கெட் போட்டியை இரத்துச் செய்ய வேண்டும். ரஹ்மான் மாலிக்கின் கருத்தை நமது உள்துறை அமைச்சர் சுசில் குமார் ஷிண்டே கடுமையாக மறுத்திருக்க வேண்டும். அதைச் செய்ய தவறியதன் மூலம் பலவீனத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்றார் சின்கா.

# ஏழைக்குழந்தைகளுக்கு நடிகை ரோஜா உதவி



நடிகை ரோஜா ஜெகன் மோகன் ரெட்டியின் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸில் முக்கிய பொறுப்பில் உள்ளார்.

ஏற்கனவே ஆந்திராவின் நகரி சட்டமன்ற தொகுதி வேட்பாளராக நடிகை ரோஜாவை ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி அறிவித்தது.

இதையடுத்து ரோஜா நகரி தொகுதியில் சுற்றுப்பயணம் செய்து மக்களை கவரும் வகையில் பல்வேறு நலப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

அதில் ஒன்றாக தாய் - தந்தையரை இழந்து படிக்க வசதியில்லாத ஏழைக் குழந்தைகளைத் தத்தெடுத்து அவர்களுக்கு மாதம் ரூபா 300 வீதம் அனுப்பி வருகிறார்.

ஏற்கனவே 25இற்கும் மேற்பட்ட குழந்தைகளை அவர் தத்தெடுத்துள்ளார்.

இப்போது மேலும் 34 குழந்தைகளை தெரிவு செய்து தத்தெடுத்துள்ளார். அவர்களுக்கு மாதம் ரூ. 300 அனுப்பி வருகிறார்.


மேலும் கட்சி சார்பில் இலவச சீருடை, புத்தகம் ஆகியவற்றையும் வழங்கினார்.

மேலும் பல குழந்தைகளை தத்தெடுக்க ரோஜா திட்டமிட்டுள்ளார்.

வரும் தேர்தலில் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் வெற்றி பெற்று ஜெகன்மோகன் ரெட்டி முதல்வர் ஆவார்.

அப்போது மேலும் பல குழந்தைகள் பயனடைவார்கள் என்று ரோஜா பிரசாரம் செய்து வருகிறார்.

# கிரானைட் முறைகேடு அம்பலம்; 50 குவாரிகளின் உரிமங்கள் இரத்து



கிரானைட் முறைகேடு தொடர்பாக மதுரை மாவட்டத்தில் 50 குவாரிகளின் உரிமங்களை அரசு தற்காலிகமாக இரத்துச் செய்துள்ளது.

மதுரை மாவட்டம் மேலூர் பகுதியில் செயற்பட்டு வந்த கிரானைட் நிறுவனங்கள், சட்ட விரோதமாக கிரானைட் கற்களை வெட்டி எடுத்ததாக தகவல் கிடைத்தது.

இதனால் அரசுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக மாவட்ட நிர்வாகம் சார்பில் அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டதையடுத்து சம்பந்தப்பட்ட கிரானைட் நிறுவனங்கள் மீது விசாரணை நடத்திட அரசு உத்தரவிட்டது.

அதன்பேரில், முதற்கட்டமாக 58 குவாரிகளில் விதிமீறல்கள் கண்டறியப்பட்டன.

எனவே இந்த குவாரிகளின் உரிமங்களை இரத்துச் செய்ய மாவட்ட ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா பரிந்துரை செய்தார்.


அதன் பேரில், 16 கிரானைட் நிறுவனங்களின் 50 குவாரிகளுக்கு வழங்கப்பட்ட உரிமம் தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டதாக கனிமவளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிறுவனங்களுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

சமீபத்தில் கிரானைட் முறைகேடு தொடர்பாக கைது செய்யப்பட்டு பி.ஆர்.பி. பழனிச்சாமி பிணையில் விடுவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை கடற்படை தாக்குதல் குறைந்துள்ளது 2012இல் உயிரிழப்பு இல்லை

## - ஜெயலலிதா -



இலங்கை கடற்படையினர் 2 முறை தாக்குதல் நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் தாக்குதல் வெகுவாக குறைந்துள்ளதாக முதலமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று காலை தொடங்கிய மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள் கலந்து கொள்ளும் 3 நாள் மாநாட்டில் கலந்துகொண்டு தலைமை தாங்கிய முதலமைச்சர் ஜெயலலிதா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா,

தமிழக அரசின் கண்டனத்தை தொடர்ந்து இலங்கை கடற்படையினரின் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் வெகுவாக குறைந்துள்ளதாகவும், 2012ஆம் ஆண்டில் தமிழக மீனவர் ஒருவர் கூட இலங்கை படையினரின் தாக்குதலில் உயிரிழக்கவில்லை என்றும் கூறினார்.

தமிழக மீனவர்கள் மீது கடந்த ஒரு வார காலத்தில்

இந்தியச் செய்திகள்

# வானத்தில் இருந்து வீழ்ந்த நீலநிறப் பனிக்கட்டி!!



வானத்தில் இருந்து விழுந்த நீலநிறப் பனிக்கட்டி ஒன்று தமிழகத்தில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பேரணாம்பட்டு- குண்டலபல்லி சாலையில் கள்ளிச்சேரி கிராமம் உள்ளது. இந்த கிராமத்தைச் சேர்ந்த சக்தி (24) என்ற இளம்பெண், நேற்று முன்தினம் காலை வீட்டின் முன் கோலம்போட சென்றார். அப்போது, வானத்தில் இருந்து நீல நிறத்தில் பனிக்கட்டி ஒன்று விழுந்தது. இதை பார்த்து அதிர்ச்சியடைந்த சக்தி குடும்பத்தினரிடம் கூறினார்.

இதுகுறித்து, தகவல் சுற்றுவட்டாரத்தில் பரவியது. கிராம மக்கள் அங்கு திரண்டனர், சுமார்50 கிலோவரை எடை கொண்ட அந்தப் பனிக்கட்டியை சிறுசிறு துண்டுகளாக உடைத்து, எடுத்துச் சென்றனர்.

நீலநிறப் பனிக்கட்டி துண்டுகளை வியப்புடன் பார்த்தனர்.இதுகுறித்து, அந்த கிராம மக்கள் கூறுகையில், அந்த பனிக்கட்டியில் இருந்து ஒருவித வாசனை வீசியது. பிசுபிசுப்புடன் இருந்தது. தொட்டபோது நீலநிறம் கைகளில் ஒட்டிக் கொண்டது என்றனர்.

# கடலூரில் மஞ்சள் மழை

இலங்கையில் பல பாகங்களிலும் சிகப்பு மழை மற்றும் மீன் மழை பெய்துள்ளது மட்டுமன்றி வானத்திலிருந்து மர்மப்பொருட்கள் பூமியை நோக்கி விழுந்து வருகின்றன. இந்நிலையில் இந்தியாவில் மஞ்சள் மழை பெய்துள்ளது. கடலூர் மாவட்டம் விருத்தாசலம் அருகேயுள்ள புதுவிருத்தகிரி குப்பம் கிராமத்திலேயே மஞ்சள் மழை பெய்துள்ளது. குறித்த பகுதியில் வானம் மேகமூட்டத்துடன் இருண்டு காணப்பட்ட நிலையில் திடீரென மஞ்சள் நிறத்தில் மழைத்தூறல் விழ ஆரம்பித்துள்ளது. இதைப் பார்த்தவர்கள் அதிர்ச்சியடைந்து,மழைத்தூறலை கைகளால் துடைத்தபோது மஞ்சள் நிறத்தில் மா போன்று காணப்பட்டது.

இதனால் அச்சமடைந்த சிலர் அங்கிருந்து பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடினர். மஞ்சள் தூறல் இரண்டு நிமிடம் வரை நீடித்தது. மஞ்சளாக பெய்தது அமில மழை என தகவல் பரவியதைத் தொடர்ந்து, கிராம மக்கள் ஏராளமானோர் அங்கு திரண்டனர் இதனால் அங்கு பரபரப்பு நிலவியதாகத் தெரிவிக்கப்படுகிறது.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ......................................

முகவரி : ......................................

பிறந்த ஆண்டு : ......................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் ......................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# பூமி...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமூகத்தில் சீர்குலைவை ஏற்படுத்தும் வகையில் பீதி கிளப்புவது என்பது கிரிமினல் குற்றமாகும். இதில் ஈடுபடுவோரைக் கைது செய்து சிறையில் அடைக்க உலகில் எல்லா நாடுகளிலும் அரசுக்கு அதிகாரம் உண்டு.

சீனாவில் ஒரு நகரில் 'உலகம் அழியப் போகிறது' என்பதாக ஒலிபெருக்கி மூலம் அறிவித்துச் சென்றவர் மற்றும் நோட்டீஸ் வினியோகித்துச் சென்றவர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நிலைமை முற்றினால் மேலும் பல நாடுகளிலும் இவ்வித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.

ஆகவே உலகம் அழியப் போவதாகக் கூறும் பீதியைப் பரப்புவதில் நீங்கள் ஒருவராக இருக்க முற்படாமல் இருப்பது நல்லது.


சீனாவிலும் ரஷ்யாவிலும் பெரும் பீதி நிலவுவதாகத் தகவல்கள் கூறுகின்றன. அமெரிக்காவில் நிலத்துக்கு அடியில் உள்ள பாதாளப் புகலிடங்களில் இடம் பிடிக்கப் பலரும் ஆர்வம் காட்டுவதாகவும் தகவல்கள் கூறுகின்றன. பிரான்ஸ் நாட்டில் உள்ள ஒரு கிராமத்தில் போய் தங்கினால் அழிவிலிருந்து தப்பிவிடலாம் என்ற வதந்தி கிளம்பி பலரும் அந்த கிராமத்தை நோக்கிப் படையெடுக்க ஆரம்பித்துள்ளனர். அதிகாரிகள் இதைச் சமாளிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

எந்த ஆபத்தும் ஏற்படப் போவதில்லை என நாஸா உட்பட யார் சொன்னாலும் நம்ப மறுக்கிறவர்களை ஒன்றும் செய்ய முடியாது. அவர்களை விட்டு விடுங்கள். நீங்கள் தெளிவாக இருங்கள். நாளை மறுநாள் 21 ஆம் திகதி மற்ற நாட்களைப் போல ஒரு நாள். அவ்வளவு தான். உலகம் அழியாது.

# சர்ச்சைக்குரிய தீவைக் கொடுக்க முடியாது;

# சீனாவுடன் சமரச பேச்சுக்கு இடமில்லை

## ஜப்பானின் புதிய பிரதமர்




தீவுப் பிரச்சினையில் சீனாவுடன் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும், ஜப்பானுக்கே சொந்தமான பகுதி என்றும் அந்நாட்டின் பிரதமராக பொறுப்பேற்க உள்ள ஷின்சோ அபே தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் நேற்று முன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத தேர்தலில் சுதந்திர ஜனநாயகக் கட்சி(எல்டிபி) தலைமையிலான கூட்டணி 300க்கும் மேற்பட்ட இடங்களில் அமோக வெற்றி பெற்றுள்ளது.

இதையடுத்து, அக்கட்சியின் தலைவர் ஷின்சோ அபே அடுத்த பிரதமராக பொறுப்பேற்க உள்ளார். அபேவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வாழ்த்துகளை தெரிவித்துக் .கொண்டதுடன், புதிய அரசுடன் இணைந்து பணியாற்ற விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பத்திரிகையாளர்களை சந்தித்து பேசிய அபே, தீவுப் பிரச்சினையில் சீனாவுடன் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று தெரிவித்தார்.

மேலும் எங்கள் கட்சித் தலைமையில் புதிதாக பதவி யேற்க உள்ள அரசுக்கு மிகப் பெரிய பொறுப்பு உள்ளது. உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார வல்லரசு நாடான ஜப்பானின் பொருளாதாரம் சர்வதேச நிதிநெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள முன்னுரிமை அளிக்கப்படும். யென் மதிப்பு வீழ்ச்சியைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்காகு தீவுக் கூட்டங்கள் (டியாவூஸ் என சீனா அழைக்கிறது) ஜப்பான் நாட்டின் ஒருங்கிணைந்த பகுதி. சர்வதேச சட்டப்படி இந்தத் தீவுக் கூட்டங்களை ஜப்பான் சொந்தம் கொண்டாடுவதுடன், தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

எனவே இதுதொடர்பாக மற்ற நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அவசியம் இல்லை. தேசிய நலனை கருத்தில் கொண்டு ஜப்பான் மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளும் நல்லுறவை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

இதுவிடயத்தில் சீனா சற்று பின்தங்கி உள்ளது. எனவே, இருதரப்பு உறவை மேம்படுத்துவது குறித்து அந்த நாடு தான் சிந்திக்க வேண்டும் என்றார் அபே.

உலகச் செய்திகள்

# ஆப்கானில் வெடிப்பு சம்பவம் 10 பெண்கள் பலி



ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற இருவேறு வெடிப்புச் சம்பவங்களில் சுமார் 11 பேர் பலியானதுடன், பலர் காயமடைந்துள்ளனர்.

கிழக்கு ஆப்கானிஸ்தானில் திங்கட்கிழமை நிலக் கண்ணிவெடி வெடித்ததில் சுமார் இளம் பெண்கள் 10 பேர் பலியானதுடன், இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்தப் பெண்கள் விறகுகளை சேகரித்துக்கொண்டிருந்ததாகவும் இதன்போது இவர்களில் ஒருவர் கண்ணிவெடியின் மீது கோடாரியால் கொத்தியபோதே இவ்வெடிப்பு இடம்பெற்றதாக நங்கர்ஹார் மாகாண ஆளுநரின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் 9 முதல் 11 வயதுக்கு இடைப்பட்ட இளம் பெண் பிள்ளைகள் என அதிகாரிகள் கூறியுள்ளனர். இதேவேளை, ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் புறநகர்ப் பகுதியில் உள்ள ஜலலாபாத் வீதியில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் பலியானதுடன், பலர் காயமடைந்துள்ளனர்.

# 2029 இல் தாக்கும் இராட்சத விண்கல்; பூமியை நோக்கி வருவதாக எச்சரிக்கை

நாம் வாழும் பூமியை விண்கல் ஒன்று தாக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

சூரியனை பல்வேறு குறுங்கோள்கள் சுற்றி வருகின்றன. இவை சுற்று வட்ட பாதையை விட்டு விலகும் பட்சத்தில் பூமியின் மீது தாக்கும் அபாயம் உள்ளது. இவற்றை விண்கற்கள் என கூறப்படுகிறது.

பூமியை நோக்கி வரும் பெரும்பாலான விண்கற்கள் புவி ஈர்ப்பு விசை காரணமாக எரிந்து சாம்பலாகி விடுகின்றன.

இவ்வாறான விண்கற்கள் இதுவரையிலும் குறைந்த அளவே சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

இந்நிலையில் அபோபிஸ் என்ற இராட்சத விண்கல் பூமியை நோக்கி பாய்ந்து வருவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விண்கல் கடந்த 2004 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்



பட்டதாகவும், பூமியில் இருந்து 36 ஆயிரம் கிலோமீற்றர் தூரத்தில் இருந்ததாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த விண்கலம் 2029ஆம் ஆண்டில் பூமியை தாக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

ஆனால் இந்த விண்கல் பூமியை தாக்காது, வரும் வழியில் புவி ஈர்ப்பு வட்டத்துக்குள் நுழைந்தவுடன் எரிந்து சாம்பலாகி விடும் என்றும் தெரிவிக்கின்றனர்.



ஆப்கானிஸ்தானின் காபூல் நகருக்கு வந்துள்ள ஹங்கேரி ஜனாதிபதி ஜோனஸ் ஆடரை வரவேற்கும் ஆப்கான் ஜனாதிபதி ஹமித் ஹர்சாய்.

# தலிபான் பயங்கரவாதிகள் 9பேர் சுட்டுக்கொலை



பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் உள்ள விமானப் படைத்தளத்தில தாக்குதல் நடத்த முயன்ற தலிபான் பயங்கரவாதிகள் 9 பேரை பாது காப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

பாகிஸ்தானின் பெஷாவர் நகரத்தில் பாச்சா கான் சர்வதேச விமான நிலையம் உள்ளது. ஞாயிறு இரவு விமான நிலையத்தைக் குறிவைத்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் ரொக்கெட் குண்டுகள் விமான நிலைய ஓடுபாதை அருகே வெடித்ததில் ஐந்து பேர் பலியாகினர், 50 பேர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதலால் விமான நிலையம் மூடப்பட்டது.

உடனடியாக பாகிஸ்தானின் அதிரடி படை வீரர்கள், ரொக்கெட் குண்டுகளை வீசிய பயங்கரவாதிகளை சுற்றி வளைத்து தாக்கினர். இதில் 9 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

பயங்கரவாதிகளின் தாக்குதலில் பொலிஸ் அதிகாரி ஒருவர் பலியானதாகக் கூறப்படுகிறது.

# சிரிய மக்களுக்கு உதவுவதே எமது கடமை தலைவரை தெரிவு செய்வது அல்ல

## கனடா அறிவிப்பு



சிரியாவுக்கான அடுத்த தலைவரை தெரிவு செய்வதை விட, போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதே எங்களுடைய முதற்கடமை என கனடா அறிவித்துள்ளது.

சிரியாவுக்கான புதிய தலைவரை தேசிய கூட்டணியிலிருந்து தெரிவு செய்ய அமெரிக்கா விரும்புகின்றது.

மேலும் இனிவரும் தலைவர் அந்நாட்டின் அனைத்து இனத்தவரையும், மத தலைவரையும் ஆதரிக்கும் நல்லதொரு தலைவராக இருக்க வேண்டும் என்றும் விரும்புகின்றது.

கடந்த வாரம் மொரோக்கா நகரில் 100க்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்று கூடி, தேசியக் கூட்டணியைச் சேர்ந்த ஒருவரை சிரியாவின் அடுத்த ஜனாதிபதியாக்க முடிவு செய்தனர்.

இதுகுறித்து கனடாவின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜான் பெயர்டு கூறுகையில், சிரியாவின் தலைவரை தீர்மானிப்பதில் பங்கேற்பதை விட அந்நாட்டில் அவதிப்படும் மக்களின் நலன்களை பாதுகாப்பதில் கனடா அதிக ஆர்வம் காட்டுகிறது என்றார்.

மேலும் சிரியாவின் அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள அகதிகளுக்கு, தங்களால் முடிந்தளவு உதவிகளை செய்யவும் தயாராக இருப்பதாக கூறினார்.

குறிப்பாக இந்த ஆண்டின் தொடக்கத்தில் 6.5 மில்லியன் டொலர் பணத்தை ஜோர்டானுக்கு கனடா அளித்துள்ளது.

இதுதவிர சர்வதேச தொண்டு நிறுவனங்களுக்கு 10 மில்லியன் டொலர் தருவதாக அறிவித்துள்ளது.

# அகதிகள் படகு மூழ்கியது; 18பேர் பரிதாபமாக மரணம்

புலம்பெயர்ந்து வேறு நாட்டில் குடியேறுவதற்காக சென்ற 18 பேர் கடலில் மூழ்கி பரிதாபமாக இறந்தனர்.

துருக்கி நாட்டின் மேற்கு கடற்கரை பகுதியிலிருந்து 28 பேர் சிறிய படகில் கடந்த 13ஆம் திகதி புறப்பட்டனர்.

அப்போது மோசமான வானிலை காரணமாக, படகு திடீரென கடலில் மூழ்கியது.

பயணம் செய்தவர்களில் 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர், இவர்களின் சடலம் ஜெஸ்பாஸ் தீவில் மித்திலினி நகர் கடற்கரையில் கரை ஒதுங்கியது. மிகுதி 10 பேரில் ஒருவர் மட்டும் காப்பாற்றப்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார், மற்றயவர்களின் நிலை என்ன என்பது தெரியவில்லை.

இது குறித்து பொலிஸ் அதிகாரிகள், மேற்கு ஐரோப்பிய நாடுகளில் குடியேறுவதற்காக துருக்கியிலிருந்து ஏராளமானவர்கள் பயணம் செய்கின்றனர். குறிப்பாக குளிர்காலங்களில் இவ்வாறு பயணம் செய்யும் போது, மோசமான வானிலை காரணமாக விபத்துகள் ஏற்படுகிறது என்று தெரிவித்துள்ளனர்.

# தொடரும் மனித உரிமை மீறல்கள்
# கனேடிய எம்.பி. கடும் கவலை

இலங்கையின் தற்போதைய மனித உரிமை மீறல் நிலைமைகள் தொடர்பாகக் கருத்துக் கூறிய கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் பாம் ஜில், அங்கு இடம்பெற்ற பல்வேறு மனித உரிமை மீறல் குற்றங்கள் குறித்து, குறிப்பாக அண்மையில் இடம்பெற்ற யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கைது தொடர்பாக தனது கவலையை வெளியிட்டார்.

யாழ். பல்கலை மாணவர் கைது தொடர்பாக தனது தொகுதியைச் சேர்ந்த பல பொதுமக்களும் தன்னிடம் தங்கள் கவலையை வெளிப்படுத்தியதாகக் குறிப்பிட்ட பாம் ஜில், மாணவர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான அவர்களது கரிசனையில் தானும் பங்கேற்பதாகக் கூறினார்.

மனித உரிமையும், பேச்சுச் சுதந்திரமும் மதிக்கப்படும் கனடிய நாட்டில் வாழும் நாம், அதே உரிமைகளை கனடியர்களின் உறவுகளும் பெற வேண்டுமென்று நினைக்கிறோம். இலங்கை அரசு, தனது நாட்டின் குடிமக்களது அடிப்படை மனித உரிமைகளை வழங்குவதுடன், அவர்கள் ஒன்றாகக் கூடி தங்களது எதிர்ப்பை அமைதியான முறையில் வெளிப்படுத்தும் உரிமையையும் மதிக்க வேண்டுமென தான் கேட்டுக் கொள்வதாகவும் குறிப்பிட்டார். கனேடிய வெளிவிவகார அமைச்சர் யோண் பெயார்ட் ஏற்கனவே பலதடவை கூறியபடி, இலங்கையில் அமைதியான ஓர் தீர்வு ஏற்படவும், யாழ் பல்கலைக்கழக பதட்டமான சூழ்நிலை முடிவுக்கு வரவும், தனது இணை ஆதரவை வழங்குவதாகவும் பாம் ஜில் தெரிவித்தார்.

அமைச்சர் பெயார்ட் இலங்கை பற்றிய தனது கருத்துக்களைத் தெரிவித்தபோது, அந்நாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் மற்றும் இன அழிப்பு தொடர்பான ஓர் நீதியான விசாரணை நடத்தப்படுவதற்கு அந்நாட்டு அரசு ஒத்துழைக்க வேண்டுமெனக் கோரியிருந்தார். மக்களது தேவைகளே முதன்மைப் படுத்தப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்திருந்தார்.

அமைச்சரின் கருத்துக்களை வலியுறுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் பாம் ஜில், அண்மையில் இலங்கையில் இடம்பெற்றுவரும் தொடர்ச்சியான வன்முறை நிறைந்த சூழ்நிலை குறித்து தான் கவலையடைவதாகவும் தெரிவித்தார்.

# புலோலி கற்பழிப்பு வழக்கு; சந்தேகநபர்கள் மூவருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவில் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி புலோலி தெற்கைச் சேர்ந்த அரியநாயகம் துளசி (வயது - 19) என்ற யுவதியைக் கற்பழித்துக் கொலை செய்த குற்றச்சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த மூவருக்கு யாழ். மேல் நீதிமன்றம் நேற்று பிணையில் செல்ல அனுமதி வழங்கியது.

இந்தக் கொலை வழக்கின் பிரதான சந்தேக நபரான இலங்கைநாதன் புஸ்பராணி என்பவருக்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையிலும் அவர்களால் பிணை கோருபவரது இடத்தில் வசிப்பவர்களாகவும் அவர்களது நிரந்தர இடத்தின் கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட பிணைக்கான ஆவணத்தையும் சமர்ப்பிப்பதுடன் வாரத்தில் கடைசி ஞாயிற்றுக்கிழமையில் காலை 9.00 மணிக்கும் நண்பகல் 12.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் யாழ். நீதிமன்றத்தில் கையொப்பமிடப்படல் வேண்டும் என்ற நிபந்தனையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் மனுதாரர் சார்பில் சட்டத்தரணி செவஸ்ரீனும் எதிராக அரச சட்டத்தரணி செல்வி நளினி கந்தசாமியும் ஆஜராகியிருந்தனர். அந்த வழக்கின் மற்றைய சந்தேக நபர்களான கணேஷ் ஜெயசீலன், இலங்கைநாதன் உதயகுமார் ஆகிய இருவருக்கும் 30 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் வாரத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 9.00 மணி முதல் 12.00 மணிவரைக்கும் இடைப்பட்ட நேரத்தில் நீதிமன்றத்திற்கு வருகைதந்து ஒப்பமிடவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (பா)

# வேண்டாத உறவு
# ஆஸி. எதிர்க்கட்சி சாடல்

இலங்கை அரசுடன் தொடர்புபட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான முறையீடுகள் அதிகளவில் குவியும் இந்நேவேளையில், அந்த நாட்டுடன் அவுஸ்ரேலியா, இராணுவ ரீதியான புலனாய்வுத்துறை ஒத்துழைப்பை பலப்படுத்த எடுத்துள்ள முடிவு விவேகமான செயற்பாடல்ல என அவுஸ்ரேலிய கிரீன்ஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது. இது தொடர்பில் கட்சியின் செனடர் லீ ரியானொன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையிலிருந்து வெளியாகும் தகவல்களைத் தமது கவனத்தில் எடுத்துக் கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சர் பொப் காரை நான் வலியுறுத்துகிறேன்.

போருக்குப் பிந்திய இச்சம்பவங்கள் தொடர்பாக அவுஸ்ரேலியாவில் வசிக்கும் அநேக தமிழர்கள் என்னுடன் தொடர்புகொண்டுள்ளனர். இச்சம்பவத்தில் இவர்கள் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளார்கள் என்றும் அவர் விளக்கியுள்ளார். இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித உரிமை துஷ்பிரயோகங்கள் சம்பந்தமாக தமது பயணத்தின்போது இலங்கை அதிகாரிகளுடன் பேசுமாறும், கடந்த வாரம் அமைச்சர் பொப காரை கிரீன கட்சித் தலைவர் கிறிஸ்டினி மில்னி பெரிதும் வலியுறுத்தியிருந்தார்.

# கிழக்கில் தொடர்மழை
# பலர் உயிரிழப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நேற்றுவரை 15 பேர் மரணமடைந்துள்ளனர். மழை வெள்ளம் மற்றும் மண் சரிவுகள் காரணமாக நாட்டின் பல பாகங்களிலும் பெண்கள், குழந்தைகள் உட்பட குறைந்தது 15 பேர் உயிழந்துள்ளதுடன், சுமார் 12 பேர் வரை காணாமல் போயுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.. நேற்று முன்தினம் திங்கட்கிழமையும் நேற்றும் கிழக்கு, மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழை காரணமாக பல பாகங்களிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளதோடு சில இடங்களில் மண் சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

ஆட்கள் உயிரிழந்த மற்றும் காணாமல் போன சம்பவங்களைப் பொறுத்தவரை அநேகமானவை மண்சரிவினாலேயே ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். நீர்ப்பாசனக் குளங்கள் நிரம்பி வழிவதால் குளங்களின் வான்கதவுகளும் (மதகுகள்) திறந்துவிடப்பட்டதன் காரணமாகவே வீதிகளில் வெள்ள நீர் பாய்ந்தோடுகிறது.

மக்கள் குடியிருப்பு பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமை காரணமாக ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி பொது இடங்களிலும் உறவினர் வீடுகளிலும் தஞ்சம் அடைந்துள்ளனர். வீதிகளிலும் ரயில் தண்டவாளங்களிலும் வெள்ள நீர் பாய்ந்தோடுவதால் ரயில் மற்றும் தரை வழிப் போக்குவரத்துச் சேவைகளும் தடைப்பட்டுள்ளது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள நிலைமை மோசமாக உள்ளது. வெள்ளத்தால் சூழப்பட்ட வேற்றுச்சேனை மற்றும் மயிலவெட்டுவான் உட்பட சில கிராம மக்கள் படகுகள் மூலம் அழைத்து வரப்பட்டு தற்போது பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். இம்மாவட்டத்தில் வாவியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இரண்டு மீனவர்கள படகு கவிழ்ந்து விபத்திற்குள்ளானதை அடுத்து காணாமல் போயுள்ளனர். வீதிகளில் வெள்ள நிலைமை காரணமாக உள்ளூர் மறறும் வெளியூர் போக்குவரத்து சேவைகளும் தடைப்பட்டுள்ளதால், நிவாரணப் பணியாளர்கள் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில சிரமங்களை எதிர்நோக்குவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## வடக்கின்...

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்தக் கலந்துரையாடலின்போது குறிப்பிட்டார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் செயற்பாடு தற்போது வெற்றிகரமாக முடிவடைந்துள்ளதாகவும் எஞ்சியுள்ள நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு சற்று கால அவகாசம் தேவைப்படுவதாகவும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். வெடிக்காத ஆயுதங்கள் குறித்த பகுதிகளில் அதிகளவில் காணப்படுவதே இதற்கான காரணம் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு தற்போது வாழும் மக்கள் இந்த ஆயுதங்களில் உள்ள உலோகங்களை சேகரிகச் சென்று பாரிய சேதங்களுக்கு உட்படுவதாகவும் நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு முன்னர் அது தொடர்பாக மக்களை தெளிவுபடுத்தும் வேலைத் திட்டங்கள் முனனெடுக்கப்பட்டுவருவதாகவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கூறியுள்ளார்.

2013 ஆம் ஆண்டில் நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் செயற்பாடுகளுக்கு அவுஸ்ரேலிய அரசாங்கம் உதவிகளை வழங்கவுள்ளதாக அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப்கார் இந்தச் சந்திப் பின்போது தெரிவித்துள்ளார். குறித்த பிரதேசங்களில் நிலக் கண்ணிவெடிகளை அகற்றி மக்களை மீள் குடியேற்றும் செயற்பாடுகளை அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் ஆதரவுடன் மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்வதுடன் மக்களின் வாழ்க்கைத தரத்தை கட்டியெழுப்பவும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதாகவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்விக்கான சந்தர்ப்பங்களை கட்டி எழுப்புவதன் மூலம் இந்த நாட்டின் இளைஞர்கள் சட்டவிரோதமாகக் குடிபெயர்வதை பெரும்பாலும் குறைக்க முடியும் என்றும் என தாம் நம்புவதாகவும் அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப்கார் கூறியுள்ளார்.

அவுஸ்ரேலிய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துடன் காட்டும் நெருங்கிய ஒத்துழைப்பு காரணமாக இலங்கையின் பொருளாதாரம் விரைவாக அபிவிருத்தியை நோக்கி நகர்வதாகவும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளார். இதன்போது இருதரப்பு முதலீட்டு சந்தர்ப்பங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கான அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர் ரொபின மூடி அவுஸ்ரேலியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் திசரசமரசிங்க கைத்தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் அமைச்சின் செயலாளர் அனுர சிறிவர்த்தன அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் கொள்கை ஆலோசகர் ஜெம்ஸ் லாசன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## ஷிராந்தி...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சரவையின் அனுமதியுடன் தேசிய கண்தான தினம் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது.

## துணை...

சாலையின் எக்ஸ்றே பிரிவு, மருந்தாளர் சேவை, ஆய்வுகூட சேவை என்பன ஸ்தம்பிதமடைந்து காணப்பட்டது. இதனை அடுத்து வைத்தியசாலைக்கு வந்திருந்த நோயாளர் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கினர். அத்துடன் அவசர நோயாளர் சேவை மட்டும் அங்கு நடைபெற்றதாகவும் மேலும் தெரியவருகின்றது. (பா)

## டீசல் விலை...

விஜேரட்ன இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இரண்டு நாட்களுக்கு முன்பு பெற்றோல் 10 ரூபாவால் விலை அதிகரிக்கப்பட்டது. டீசலின் விலை அதிகரிப்பதற்கான சாத்தியம் காணப்படுகிறது. அந்த நிலைமைகளுக்கு அமைய விலை அதிகரிக்கப்பட்டால் தொடர்ந்தும் பேருந்து சேவையினை எம்மால் தொடர முடியாது.

பெப்ரவரி மாதம் அதிகரிக்க இருக்கும் உத்தேச பேருந்து கட்டண மீளாய்வை தற்போது இருக்கும் குறைபாடுகளை நீக்காதவரைக்கும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இந்திய...

இந்திய இராணுவத் தளபதி பிக்ரம் சிங் உள்ளிட்ட இராணுவ அதிகாரிகள் கொண்ட இக் குழுவினர் இன்றைய தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் முப்படைகளின் தளபதிகளையும் சந்திக்கவுள் ளனர்.

இதனிடையே, வவுனியாவில அமைந்துள்ள பாதுகாப்பு படை தலைமையகத்தால் முனனெடுக்கப்பட்டு வரும் முன்னாள் விடுதலைப் புலி போராளிகளுக்கான புனருத்தாபன நடவடிக்கைகளையும் அவர்கள் நேரடியாகப் பார்வையிட்டு முனனாள் புலிகளையும் சந்திக்கவுள்ளனர்.

## ராதிகா...

மேற்படி விருது விழாவில் கனடாவில் கடந்த 20 வருடங்களுக்குள் பரதநாட்டிய அரங்கேற்றம் செய்த பரதக்கலைஞர்கள் உட்பட மேலும் மிருதங்கம், வயலின், வாய்ப்பாட்டு போன்ற துறைகளில் சிறந்தவர்களை தேர்ந்தெடுத்து சிறப்புவிருது வழங்கும் மேற்படி வைபவத்தில் பல இளம் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். மேற்படி விருது வழங்கும் விழாவில் முதன் முதலாக பரத நாட்டிய ஆசிரியை ஒருவரிடம் பரதநாட்டியம் பயின்று அவரது முதன் மாணவியாக அரங்கேற்றம் செய்தவர் என்ற பெருமைக்குரிய சில பரதக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். அவரகளில் பெருமைக்குரியவராக அழைக்கப்பட்டு “பரதநாட்டிய நட்சத்திரக் கலைஞர் விருது’ வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர் நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# யாழ்.கொட்டடிப் பகுதி மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு

## மக்கள் சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் உறுதி



(யாழ்ப்பாணம்)

யாழ்.கொட்டடி மீனாட்சியம்மன் சனசமூக மற்றும் முத்தமிழ்திடல் வாழ் மக்களுடைய பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டு அவற்றுக்கு உரிய தீர்வு பெற்றுத் தரப்படுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நேற்று அப்பகுதி மக்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

இதன்போது மீனாட்சிபுரம் மருதோண்டிக் காட்டுப்பகுதி, முத்தமிழ்திடல் கிராமம் உள்ளிட்ட பகுதிகளில் வாழும் மக்களது அடிப்படைத் தேவைகளான நிரந்தரக் காணிகளை வழங்குவது மற்றும் அவர்களுக்கான வீடுகளை வழங்குவது உள்ளிட்ட பல்வேறு தேவைகள் தொடர்பில் ஆராயப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

இதனிடையே பாலர் பாடசாலை, சனசமூக நிலையம், பிள்ளையார் கோவில் என்பன அப்பகுதியில் புதிதாக அமைக்கப்படவுள்ள அதேவேளை, முத்தமிழ்திடல் மைதானம் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படுமென்றும் தெரிவித்தார்.

அத்துடன், குறித்த பகுதிகளில் வாழும் மக்களுக்கு காணிகளை உரிமையாக்குவது தொடர்பில் எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு இடையில் துறைசார்ந்தோர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் இதுவரையில் சுவீகரிக்கப்படாத உரிமை கோரப்படாத தனியார் காணிகளை சுவீகரித்து அவற்றை காணிகள் இல்லாத மக்களுக்கு பகிர்ந்தளிப்பது தொடர்பிலும் மட்டுமல்லாது அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தபபடுமென்றும் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் 561 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில், குறிப்பிட்ட மக்களது ஏனைய கோரிக்கைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் யாழ். நகரை அழகுபடுத்தும் விடயத்தில் பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாத வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

இதனிடையே மீனாட்சியம்மன் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்திற்கு சென்ற அமைச்சர் அங்கு முன்பள்ளியொன்றை அமைப்பது தொடர்பில் ஆராய்ந்ததுடன், அங்குள்ள பாலர் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு முற்றத்தையும் கடற்கரையை அண்டிய வெற்றுக் காணியையும் பார்வையிட்டார்.

இதன்போது யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, மாநகர ஆணையாளர் பிரணவநாதன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் இராசநாயகம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட பணிப்பாளர் நோயல் ஜெயச்சந்திரன், யாழ்ப்பாண பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் ஆகியோர் உடனிருந்தனர்.

# "கலாபூஷணம்" விருது மாணிக்கவாசகத்துக்கும்



சிரேஷ்ட ஊடகவியலாளர்களில் ஒருவரான பொனனையா மாணிக்கவாசகம் அவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் விருதான கலாபூசணம் விருது வழங்கப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை கொழும்பில் நடந்த விழாவில் இந்த விருது வழங்கப்பட்டது. நாட்டின் பல பாகங்களை சேர்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் என நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

இலங்கையின் கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் இந்த விருது வழங்கும் விழா நடைபெற்றது.

கலாபூசணம் விருது பெற்ற மாணிக்கவாசகம் இலங்கையில் உள்ள சிரேஷ்ட ஊடகவியலாளர்களில் ஒருவராவார். பி.பி.சி. மற்றும் வீரகேசரி வவுனியா செய்தியாளராக இருக்கும் இவர் இலங்கை தமிழ் ஊடகவியல்ாளர் ஒன்றியம் மற்றும் வவுனியா மாவட்டச் செய்தியாளர் சங்கம் ஆகியவற்றின் முன்னாள் தலைவராவார்.

# மண் சரிவில் சிக்கி மூவர் உயிரிழப்பு

(கொழும்பு)

பதுளை பசளை பகுதியில் நேற்று இடம்பெற்ற மண் சரிவில் 3 பேர் உயிரிழந்துள்னளர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். தந்தையும், 10, 14 வயது பிள்ளைகளும் இவ்வாறு உயிரிழந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

பசளை கோனவல பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மண்ணில் புதையுண்டே குறித்த மூவரும் உயிரிழந்துள்ளனர். இதேவேளை, மாத்தளை நிக்கலோயா பிரதேசத்தில் இடம்பெற்ற மண்சரிவில் லயன் அறைகள் புதையுண்டுள்ளன. பிரதேச மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

# இலக்கை எட்டியது சுற்றுலாத்துறை

இவ்வாண்டின் 950,000 ஆவது சுற்றுலாப்பயணி நேற்றுக் காலை 8.25 மணிக்கு கொழும்பை வந்தடைந்ததாக இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை அறிவித்துள்ளது. இவ்வாண்டு நிறைவடைய இன்னமும் 13 தினங்கள் எஞ்சியுள்ள நிலையில், 5 ஆண்டுகளுக்கான சுற்றுலா திட்டத்தின் அடிப்படையில் இந்த இலக்கு இவ்வருட நிறைவில் எய்தப்பட திட்டமிடப்பட்டிருந்தது.

இறுதியாக எமக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில், கடந்த ஒக்ரோபர் மாதத்தில் மொத்தமாக 80,379 சுற்றுலாப் பயணிகள் இலங்கையை வந்தடைந்திருந்தனர். இதன் மூலம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் இலங்கைக்கு வருகை தந்திருந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 774,151 ஆக அதிகரித்திருந்தது. 2011ஆம் ஆண்டுக்கான சுற்றுலாப் பயணிகள் இலக்கான 800,000 கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி இலங்கை எட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# பிச்சைக்காரனின் மறுபக்கம் காத்திருந்தது அதிர்ச்சி

கொழும்பின் புறநகர்ப் பகுதியான ராகம பிரதேசத்தில் பிச்சைக்காரர் ஒருவரைக் கைது செய்த பொலிஸார், அவர் ஒரு இலட்சாதிபதி என்ற விபரத்தைக் கேட்டு அதிர்ச்சியடைந்துள்ளதாக சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் பாதுகாப்பு அதிகாரிகள் ராகம புகையிரத நிலையத்தில் புகையிரத பெட்டிகளில் ஏறி பிச்சை எடுத்து திரிந்த 18 பிச்சைக்காரர்களைக் கைது செய்துள்ளனர். இவர்கள் புகையிரதத்தில் பயணம் செய்யும் பயணிகளைத் தொந்தரவு செய்வதாக பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பிச்சைக்காரர்களில் ஒருவர் இலட்சாதிபதி என விசாரணைகளின் மூலம் தெரியவந்ததையடுத்து பொலிஸார் அதிர்ச்சியடைந்துள்ளதாக அப்பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. குருநாகல் நாரம்மல பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு இலட்சாதிபதி என தெரிவிக்கப்படுகிறது. குறித்த பிச்சைக்காரர் ஒரு வான் மற்றும் இரண்டு முச்சக்கர வண்டிகளுக்கு உரிமையாளர் எனவும் அவரது வங்கிக் கணக்கில் 20 இலட்சம் ரூபா வைப்பில் இடப்பட்டுள்ளதும் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த பிச்சைக்காரர் ஒரு மாற்றுத்திறனாளி எனவும் கைது செய்யப்பட்டவேளை அவரிடம் 4ஆயிரம் ரூபாய் பணம் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அப்பணம் ராகம புகையிரத நிலையத்தில் இரண்டு மணித்தியாலயத்திற்குள் பிச்சை எடுத்த பணம் எனவ்ும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பிச்சை எடுப்பதற்கு தினமும் தனது வானில் வருவதாகவும் அச்சமயத்தில் அழுக்குத் துணிகளை மாற்றிக் கொண்டு தொழிலை ஆரம்பிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தனது முச்சக்கர வண்டிகள் இரண்டையும்இவர் வெளியில் நாளாந்த வாடகைக்கு விட்டு பணம் சம்பாதித்து வந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, 2000 ரூபாவை அபராதமாக செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# மாத்தளையில் அனர்த்தம் 10 பேரைக் காணவில்லை

மாத்தளை, ரத்தோட்டை நிக்கோலய மலையில் ஏற்பட்ட மண்சரிவில் ஆறு வீடுகள் மண்ணுக்குள் புதையுண்டன. அந்த வீடுகளுக்குள் ஆகக்குறைந்தது 10 பேர் சிக்குண்டிருக்கலாம் என மாத்தளை அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. சிக்குண்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவோரை மீட்கும் நடவடிக்கைகளில் பொலிஸாரும் , கடற்படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, இயற்கை அனர்த்தங்களினால் மாத்தளையில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அந்த மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களினால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 8 வரையும், காணாமல் போனவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக மாத்தளை மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது. மாத்தளை மாவட்டத்தை பொறுத்தவரையில் 373 குடும்பங்களைச் சேர்ந்த 1528 பேர் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கொழும்பு - பதுளை பிரதான வீதி, பேரகல, ஹப்புத்தளையில் நேற்று முற்பகல் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக குறித்த வீதியினூடான போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இவ்வீதியினூடாகப் பயணத்தை மேற்கொள்ள உள்ளவர்கள் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# கிராம அலுவலர் இடமாற்றம்

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பருத்தித்துறை நகர கிராம அலுவலர் கே.யோ.கேந்திரநாதன் வவுனியாவிற்கு இடமாற்றம் பெற்றுள்ளார். பருத்தித்துறை நகர பதில் கிராம அலுவலராக ஆர்.புலேந்திரன் பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். (01)

# சட்டத்தரணிகள் சங்கத்தில் ஏதேச்சதிகாரம் இல்லை

## அடியோடு மறுக்கிறார் விஜயதாச ராஜபக்ஷ

(கொழும்பு)

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்தில், தீர்மானங்கள்- எதேச்சாதிகாரமான முறையில் நிறைவேற்றப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுக்களை அச்சங்கத்தின் தலைவர் விஜேதாச ராஜபக்ஷ நேற்று மறுத்துள்ளார். இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் கைக்கூலிகள் எனவும் பக்கச்சார்பான கருத்துக்களைக் கூறுபவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தனது பதவியை ராஜினாமா செய்த உப தலைவர் முற்சாய்வு உள்ளவர். இவரது கணவர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரியாக உள்ளார். இவரது கணவரான ஜயந்த விக்ரமரத்ன, பிரதம நீதியரசரின் கணவருக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரியாக உள்ளார். இதனால், அவர் ஒருபோதும் பக்கச்சார்பு அற்றவராக இருக்கவில்லை என அவர் கூறினார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் பக்கச்சார்ப்பு இன்றியே நடத்தப்பட்டது. சுயநல நோக்கம் கொண்ட சிலர் ஊடகங்களுக்காக நாடகம் போட்டனர் என ராஜபக்ஷ கூறினார். உபதலைவரின் ராஜினாமாவை தான் வரவேற்பதாகவும் அரது ராஜினாமா இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தை பாதிக்கமாட்டாது எனவும் விஜேதாச ராஜபக்ஷ மேலும் கூறினார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 டிசம்பர் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.